27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com



RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto) காப்புறுதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை



நதி 27 | பாலம் 12 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 15, 2017


# பிரித்தானியாவில் தொங்கு நாடாளுமன்றம்!

பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு 2016 யூன் 08 இல் நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்காதபடியால் பிரித்தானியாவில் தொங்கு நாடாளுமன்றம் (Hung Parliament) அமைகிறது. பிரித்தானிய அரசியல் அமைப்பின்படி



நாடாளுமன்றத் தேர்தல்கள் ஐந்து வருடத்திற்கு ஒருமுறை நிர்ணயிக்கப்பட்ட ஒரு திகதியில் தான் நடைபெற வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் 2015 மே 07 ஆம் திகதி நடைபெற்றது. இதனால் அடுத்த தேர்தல் 2020 மே 07 இல் தான் நடைபெற வேண்டும்.

2015 மே 07 இல் நடைபெற்ற பிரித்தானியாவின் பொதுத்தேர்தலில் வென்ற பழமைவாதக் கட்சியின் தலைவரான டேவிட் கமரன் (David Cameron) பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்ல வேண்டும் எனப் பொதுசனவாக்கெடுப்பில் மக்கள் தீர்மானித்ததால் பதவி விலகினார். அதைத் தொடர்ந்து 1956 ஒக்ரோபர் 01 இல் பிறந்த தெரசா மே (Theresa May) 2016 யூலை 11 இல் பழமைவாதக் கட்சியின் (Conservative Party) தலைவராகத் தெரிவாகி 2016 யூலை 13 இல் இருந்து பிரித்தானியாவின் பிரதமராகப் பதவி வகிக்கின்றார்.

2016 யூலையில் பிரதமராகப் பதவியேற்ற தெரசா மே அவர்கள் 2017 மார்ச்சில் பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்வதற்கான உத்தியோக பூர்வமான முன்னறிவித்தலை ஐரோப்பிய ஒன்றியத்திடம் சமர்ப்பித்தார். அதேநேரம் பிரித்தானிய மக்களிடம் நடத்திய கருத்துக் கணிப்புக்களின்படி பழமைவாதக்கட்சி அதற்கு அடுத்ததாக நாடாளுமன்றத்தில் அதிகளவு ஆசனங்களைக் கொண்டிருந்த தொழிலாளர் கட்சியிலும் (Labour Party) பார்க்க 20 புள்ளிகள் அதிகப்படியான செல்வாக்கை மக்கள் மத்தியில் பெற்றிருந்தது என ஊடகங்கள் தெரிவித்திருந்தன. இதனால் பழமைவாதக் கட்சி தேர்தலில் மிகப் பெரும்பான்மையைப் பெற்று மிகுந்த பலத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரித்தானியா பிரிவது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் எனக்கூறி பிரதமர் தெரசா மே அவர்கள் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல்


(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
www.divhomes.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721
Fax: 647-351-3099
mortgage@nesan.ca
www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Buying~Leasing~Renting~Selling
A name you can trust
RUTH VIJENDRAN
Full-Time Sales Representative
416.300.5454
ruthvjhomes@gmail.com
ruthvjhomes.com
LISTING COMMISSION 1%
Home is where your story begins, let me help you get there!!!
HOMELIFE/FUTURE REALTY Inc. Brokerage

DENTAL OFFICE
இப்பொழுது 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
Wisdom Tooth Extraction.
Root Canal.
Gum Treatment.
Tooth Filling.
Dental Implant.
Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

JENA GULASINGHAM
Sales Representative
416.702.2030
jenahomelife@gmail.com
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc., Brokerage



Under Construction
Occupancy: Dec 17, 4 BR, 4 WR



Scarborough-Detached
Renovated solid brick, BR: 4 WR: 3



Semi Detached-Markham
3 BR, 3 WR, No sidewalk



Brand New-Detached, Brampton
BR 4, WR 3



Under Construction-Scarborough
Occupancy: Nov 2018, BR 1+1 WR 2



2 Yr New Town House -Oshawa
BR 3 , WR 3, Fin. W/O Basement



Condo-Markham, BR :2+1
2 Full WR, Maint. Fee: $140

THAS....
SOLID NEGOTIATOR

15 YEARS OF BUSINESS EXPERIENCE

REAL ESTATE INVESTOR & ADVISOR.



**Sellers:** *CALL ME ONLY, IF YOU WANT TOP DOLLAR FOR YOUR HOME.*

**Buyers:** *NOT ENOUGH DOWN PAYMENTS? CALL ME FIRST.*

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com

#1 RE/MAX

**Thas Thirunavukkarasu**
Sales Representative Dip-in-Eng(Hons)
**416-388-4333**
thasremax@gmail.com

Not intented to solicit buyers/sellers under contract. All properties advertised herein may not be listed by Thas.



# Cottages, Homes, Farms, Lands...


RICE LAKE #275 - COTTAGE



Havelock ,Trent River - Cottage Water front



Scarb & Ellesmere 3BD 2 WR Sep Ent + apt

WATER FRONT COTTAGE WEEKDAYS & WEEKEND RENTALS
From $150 per day
2350 sq. ft. Living Space
6Bed Rooms Free BBQ, Canoe, padel boat, life jackets and more..



Tapscott & Finch- 3BR / 2WR



SIMCO LAKE - Cottage Water front



Markham/ Denison - UNIT FOR SALE







VARIETY STORE FOR SALE - VICTORIA PARK & DANFORTH



TAUNTON/ RITSON - Premium Lot

*BUILDING PERMITS !!!*
*For addition and new homes get an advice and cosultancy services and Building Permit Applications*

Century 21
BROKERAGE*
AFFILIATE REALTY INC.
OFFICE : 416-290-1200

*17 YEARS REAL ESTATE EXPERIENCE*



**PAT PUSHPAKANTHAN**
**Call :416-894-1187**
REAL ESTATE BROKER - HALL OF FAMER
**PAT WILL BEAT ANY DEAL*!!**

1% Listing Commission *
Also Available

# பிரித்தானியாவில்

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒன்றை வைக்க 2017 ஏப்பிரல் 18 இல் தீர்மானித்தார். இவரின் இந்த முடிவுக்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு வழங்கின.

பிரித்தானிய நாடாளுமன்றம் 650 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டது. பிரித்தானிய அரசியல் அமைப்பின்படி அடுத்த தேர்தல் நடைபெறும் 2020 மே 07 ஆம் திகதியினை மாற்றித் தேர்தலை இடையில் நடத்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் (434 அதிகப்படியான வாக்குகள்) வேண்டும். பிரதமரின் முடிவுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு அளித்த படியால் 509 அதிகப்படியான (522 ஆதரவு 13 எதிர்ப்பு) வாக்குகளால் பிரதமரின் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவது என்ற தீர்மானம் வெற்றி பெற்றது. இதை அடுத்துப் பிரதமர் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை 2017 யூன் 08 இல் நடத்துவதாக அறிவித்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்க முன்னர் கட்சிகள் பெற்றிருந்த ஆசனங்களின் விபரம்.
பழமைவாதக் கட்சி - 330
தொழிலாளர் கட்சி - 232
ஸ்கொட்டிஷ் தேசியக்கட்சி (SNP) - 56
லிபரல் ஜனநாயகக் கட்சி - 8
ஜனநாயக ஒன்றியக் கட்சி (DUP) - 8
Sinn Fein கட்சி - 4
ஏனைய கட்சிகள் - 12

தற்போது நடந்து முடிந்த தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் விபரம்.
பழமைவாதக் கட்சி - 318
தொழிலாளர் கட்சி - 261
ஸ்கொட்டிஷ் தேசியக்கட்சி (SNP) - 35



லிபரல் ஜனநாயகக் கட்சி - 12
ஜனநாயக ஒன்றியக் கட்சி (DUP) - 10
Sinn Fein கட்சி - 7
ஏனைய கட்சிகள் - 7
அறுதிப் பெரும்பான்மையைப் பெற ஒரு கட்சி 326 ஆசனங்களைப் பெற வேண்டும்.

இதனால் தற்போது 318 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ள பழமைவாதக் கட்சி 10 ஆசனங்களைப் பெற்ற ஜனநாயக ஒன்றியக் கட்சி (DUP) உடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முடிவெடுத்துள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகளை பழமைவாதக் கட்சியின் தலைவரான தெரசா மே அவர்கள் DUP இன் தலைவரான ஆலின் ஃபோஸ்ரர் (Arlene Foster) உடன் மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை ஏற்கனவே அறுதிப்பெரும்பான்மையைப் (330 ஆசனங்கள்) பெற்றிருந்த பழமைவாதக்கட்சியை மிகக் கூடிய பெரும்பான்மையைப் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு திடீர் தேர்தலை நடத்தி அறுதிப் பெரும்பான்மையையும் (318 ஆசனங்கள்) இழக்க வைத்த தெரசா மே பதவி விலக வேண்டும் எனப் பலரும் கூறி வருகின்றனர்.

2015 மே இல் நடைபெற்ற தேர்தலில் பழமைவாதக்கட்சி 36.9% வாக்குகளையும் தொழிலாளர் கட்சி 30.4% வாக்குகளையும் பெற்றிருந்தன. ஆனால் 2017 யூன் இல் நடைபெற்ற தேர்தலில் பழமைவாதக் கட்சி 42.4% வாக்குகளையும் தொழிலாளர் கட்சி 40.0% வாக்குகளையும் பெற்றன. இத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானவர்களில் 68.7% ஆனவர்கள் வாக்களித்திருந்தனர்.

பிரித்தானியாவில் கடந்த இரு தசாப்த காலத்தில் தற்போதுதான் ஒரு சிறுபான்மை அரசு பதவியேற்றுள்ளது. இது பிரித்தானியாவின் கடன் வாங்கும் தராதரத்தில் (Credit Rating) பாதிப்பை ஏற்படுத்தலாம் என Moody நிறுவனத்தின் உபதலைவர் Kathrin Muehlbronner தெரிவித்துள்ளார். 700இற்கு மேற்பட்ட வணிக நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட இயக்குனர்களின் நிறுவனம் (Institute Of Directors) தொங்கு நாடாளுமன்றம் வணிக நம்பிக்கையை மூழ்கடித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.










# அம்மா
## நகை அடைவு மாடம்



# AMMA PAWN BROKER

வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்

**2425 Eglinton Ave. E**
**Scarborough, ON**
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
**416-757-0034**
**416-994-3861**
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com

**1.5%** முதல் **2%**

**$1000ற்கு மாதம் $20 மட்டுமே (Month)**

- நம்பிக்கை
- நாணயம்
- உத்தரவாதம்

அம்மாவுக்கு நிகரான சேவை அம்மா நகை அடைவுமாடமே

உங்கள் பழைய நகைகளை நியாயமான விலையில் வாங்கலாம்/விற்கலாம்

அரச அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# அரிதான அழகான அமோலைட் கனேடிய மாணிக்கக் கற்கள்



சுந்தரம் இந்திரராஜா

## The Ammolite – Canada's Rarest Gemstone

பூமியின் மேலோடு புதிர் துண்டுகளை (pieces of a puzzle) போன்று டெக்டோனிக்ஸ் தட்டுகள் ஒட்ட வைக்கப்பட்டிருக்கிறது. தட்டுக்கள் அசையும் தன்மை கொண்டவை. தட்டுக்களின் அசைவு சிறிதளவாயின் பூமியில் நடுக்கங்கள் ஏற்படும். தட்டுக்களின் அசைவு கூடுதலாக இருப்பின் அசைவதற்கு இடம் போதாவிடில் ஒரு தட்டின் மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி அல்லது பக்கவாட்டில் உரசிக் கொண்டு நகரும்.

மேற்கு கடல்பாதையின் கீழிருந்த பசிபிக் தட்டும் வட அமெரிக்கத் தட்டும் ஒன்றை நோக்கி மற்றொன்று நகரும் காரணமாக ரொக்கி மலைத்தொடர் (Rocky Mountains) 70 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் உருவாயின என்று அறிகிறோம். கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பேட்டா மாகாண எல்லையிலுள்ள ரொக்கி மலைத்தொடர் கனடாவில் தொடங்கி ஐக்கிய அமெரிக்காவின் நியூ மெக்சிகோ மாநிலம் வரை நீண்டுள்ளது.
இந்த மலைச்சாரல் (Rocky Mountains)



அன்று கனடாவின் மேற்குக் கரை கடல் பாதையாக இருந்தபோது பல கடல் பிராணிகள் வாழ்ந்துள்ளன. நத்தை ஓடு போன்ற மிகவும் தடிப்பான ஓடு கொண்ட இராட்சத கணவாய் தோற்றம் கொண்ட ஒருவித கடல் பிராணிகள் இயற்கையின் சீற்றத்தால் புதையுண்டு 70 மில்லியன் வருடங்களுக்கு பின்னர் நில அமுக்கங்களால் ஓடுகள் மாற்றம் பெற்றுள்ளன. காபன் என்ற மூலகத்திலிருந்து கடினமான வைரம் என்ற மாணிக்கக் கற்கள் எவ்வாறு கிடைத்ததோ அதேபோன்ற ஒரு நிகழ்வால் விலை உயர்ந்த அமோலைட் மாணிக்கக் கற்கள் கிடைக்கத் தொடங்கியுள்ளன.

எங்கள் நாட்டில் கிடைத்த புதையல் பற்றி அறிய எல்லோரும் ஆவலாய் இருப்பீர்கள் சுருக்கமாய் கூறுகிறேன்.

உலகின் அபூர்பமாக அரிதாக கிடைக்கும் 3 மாணிக்கக் கற்களில் ஒன்றான அமோலைட் (Ammolite) எனப் பெயர் கொண்ட



## கனடா - 150 வருடங்கள்

மாணிக்கக் கற்கள் கனடாவின் அல்பேட்டா மாகாணத்தில் உள்ள ரொக்கி (Rocky Mountains) மலைகளின் கிழக்கு பகுதி மலைச் சரிவுகளில் அண்மையில் நடத்திய அகழ்வின் போது கண்டுபிடித்துள்ளனர். சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம் மற்றும் ஊதா எனப் பல துடிப்பான சேர்க்கைகளை ஒரே கல்லில் காணத்தக்க இயற்கை வழங்கிய மிகவும் அரிதான அழகான அமோலைட் மாணிக்கக் கற்கள் இவை. 1981 இல் உலக நகை கூட்டமைப்பு அதிகாரசபை உத்தியோக பூர்வ ரத்தின நிலை (gemstone status) அமோலைட் மாணிக்கக் கற்களுக்கு வழங்கியுள்ளது.

அமோலைட் சுருள் வடிவ ஓடுகள் உள்ளே வாழ்ந்த இராட்சதக் கணவாய் போன்ற உயிரினங்களாகும். மற்ற விலங்குகள் போல், அமோலைட் சிறிய மீன் சிறிய கடல் பிராணிகளை இரையாகக் கொண்டது. தங்கள் ஓடுகளுக்குள் உடலை மறைத்து வைத்து இரை அருகில் அணுகும்போது உடலை நீட்டி இரையை உறுஞ்ச வல்லது. உள்ளே கூர்மையான, தாடைகள் இரையை வைப்பதற்கும் அரைப்பதற்கும் இருந்தன. சில அம்மோனைன்கள் மூன்று அடி (ஒரு மீட்டர்) வரை வளரக் கூடியவாய் இருந்திருக்கின்றன. அமோலைட் வளர வளர புதிதாக சுருள் வடிவ ஓடு ஒன்று வளரும். வெளி புதிதான ஓட்டினுள்தான் அமோலைட் வாழும். ஆழமற்ற கடலையும் வெப்பமான நீரையும் தேடி வாழ்ந்ததாக கணக்கிட்டுள்ளார்கள்.

அமோலைட் ஓடுகள் (படிவுகள்) மலைச் சரிவு மட்டத்திலிருந்து 15 மீற்றர் அல்லது 50 அடி தொடக்கம் 50 மீற்றர் அல்லது 150 அடி வரையில் உள்ள ஆழக் குழிகளிலிருந்து எடுக்கப்படுகின்றன. படிவுகளிலிருந்து எடுக்கப்பட்ட கடல் பிராணியின் ஓட்டினுள் அடைபட்டிருக்கும் மண், கற்கள் கவனமாக நீக்கப்பட்டு வெடிப்புகள் நெருக்கமாகக் காணப்படும் பகுதிகள் நீக்கப்படும். பின்னர் தடிப்பாக இருக்கும் கோதின் பகுதி மாத்திரம் முதலில் தரப்படுத்தப்பட்டு ஆபரணங்களில் பதிக்கக் கூடியதான அளவுக்கு வெட்டுதல், படிந்துள்ள அழுக்களை தீட்டி நீக்குதல், இயற்கையாக அதிலிருந்து வரும் அழகு வர்ணங்களை வெளிக்கொண்டு வருதல் போன்றவற்றைக் கணக்கில் கொண்டால் குழிகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட அமோலைட் சுமார் 50 வீதமான பகுதிகள் தான் நகைகளுள் பதிக்க ஏற்றவையாக உள்ளன. அமோலைட் எனப் பெயர் கொண்ட மாணிக்கக் கற்கள் விலை உயர்வாக விற்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம். 1981 தொடக்கம் 2004 வரை பதப்படுத்தல் தரப்படுத்தல் விற்பனை உரிமை வெளிநாட்டில் உள்ள ஒரு கொம்பனி தான் 'Korite International' வைத்திருந்தது. இதனால் அமோலைட் பதித்த ஆபரணங்கள் வெளிநாடுகளில் மாத்திரம் விற்பபையாகி வந்தன.

2004 ஆம் ஆண்டில் அல்பேட்டா மாகாணத்திலும் மற்றும் 2007 இல் லெத்பிட்ஜ் நகரத்திலும் (City of Lethbridge) உத்தியோகபூர்வ ரத்தின நிலை (Gemstone Status) அமோலைட் மாணிக்கக் கற்களுக்கு வழங்கப்பட்டது. இப்போ இங்கும் சில நகைக் கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளது. கனடாவில் கிடைத்து வரும் அமோலைட் படிவுகள் இன்னும் 15-20 வருடங்களில் முடிவுக்கு வந்துவிடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அல்பேட்டா மாகாணத்தில் எங்கள் நாட்டிற்குத் தேவையான எண்ணை வளமும் உலகின் அபூர்வமாகக் கிடைக்கும் விலை உயர்ந்த அமோலைட் மாணிக்கக் கற்களின் படிவுகளும் கிடைத்திருப்பதை யிட்டு மகிழ்ச்சி கொள்வோம்

# தந்தையர் தினம்

முத்தமிழ் அத்தொடு மறந்திடாமல்
மூத்த தலைமுறையைக் காட்டி
அத்தனை சிறப்பையும் பேணுதல்
எத்தனை கோடிபெறும் என்பார்
"சூரியன் உதிக்குமுன் எழுந்து
பாரிய உன் கடமை என்று
நேரம் தவறாமல் சென்று
நேர்மையாய் உழைத்திடு" என்பார்
செந்தமிழ்த்தேன் மொழியை எம்
சிந்தையில் புகுத்தி விட்டு
எந்தை "சொற்பிழை, பொருட்பிழை
அந்த இரண்டையும் கவனி" என்பார்
முற்றத்து மணலில் 'அ' எழுதவெனச்
சுற்றி இருப்போம்; நட்ட நடுவில்
சார்மனைக் கதிரை; சாய்ந்த படியே
பார்ப்பார்; 'வலஞ்சுழி போடு' என்பார்
அந்த நிலாவில் பலப்பல கதைகள்
சொந்தக்குரலிற் சிறுவர் பாடல்கள்
உலாவப்போவோம் என்று நரி சொல்ல
நல்லாய் நடந்தன நண்டுகள் சிரி என்பார்
தந்தையர் தினத்தில் அவர் வெள்ளை வேட்டி
சந்தனப் பொட்டு, சால்வையில் ஒருமாலை
தலைமை வாத்தியார் வலம் வந்த காட்சி
நிலைக்காது போனாலும் நினைப்போம் என்கிறேன்



- ஈ.சா. வரம் -


**CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT**
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 3



குரு அரவிந்தன்

**கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.**

கனடாவின் முதல் குடிமக்கள் (First Nations) வாழ்ந்த நிலப்பகுதிகளின் அடிப்படையில், அவர்களைச் சட்டரீதியாக அடையாளம் காண்பதற்காக அவர்களை ஆறு பிரிவாகப் பிரித்தார்கள். அவையாவன:

சமவெளி குடிகள் - (Plains)
இறொக்குவா குடிகள் - (Iroquoian Nations)
வட வேட்டுவக் குடிகள் - (Northern Hunters)
வட மேற்கு குடிகள் - (Northwest Cost)
அல்கோன்கிய குடிகள் - (Algonkian Nations)
பீடபூமிக் குடிகள் (Plateau)



இதைவிட இனுவிட் என்ற பழங்குடிகள் கனடாவின் மேற்பகுதிகளில் வாழ்ந்தவர்களாவர். தொடக்க காலத்தில் வடதுருவ பனிப்பகுதியில் வாழ்ந்த இவர்களைச் சிலர் எஸ்கிமோக்கள் என்றும் அழைத்தார்கள். வெப்பமான சுவாத்தியத்தைக் கொண்ட நாடான இலங்கையில் இருந்தவர்களுக்குப் பனிக்கட்டியால் கட்டப்பட்ட வீடுகளில் இவர்கள் வாழ்ந்தார்கள் என்பதை மாணவப் பருவத்தில் அறிந்தபோது மிகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. காலம் செய்த கோலத்தால், இன்று நேரடியாகவே படங்களில் பார்த்த அந்த இடங்களைப் பார்க்க முடிகின்றது. அவர்கள் வாழ்ந்த பகுதியில் அக்காலத்தில் கிடைத்த மச்சம், மாமிசம் போன்றவற்றையே அவர்கள் அதிகமாக உணவாகக் கொண்டனர். இதைவிட சோளம், பீன்ஸ் போன்றவற்றையும் உணவாகக் கொண்டனர். இவர்கள் நுனாவுட், நோத்வெஸ்ட் பகுதிகளை வாழ் விடமாகக் கொண்டவர்கள். இவர்களைப் போலவே றெட்றிவர், மற்றும் சஸ்கச்சுவான் ஆற்றங்கரைப்பகுதிகளில் வாழ்ந்தவர்களை மெயிற்ரீஸ் என்று அழைத்தனர். இவர்கள் எல்லோரையும் முதற்குடிகள் என்றே தற்போது அடையாளம் காண்கின்றனர்.

மிருகத் தோல்களின் வியாபாரத்திற்காகவே ஐரோப்பியர் கனடாவிற்கு முக்கியமாகத் தொடக்கத்தில் வந்தனர். ஐரோப்பியரின் வருகையால் வட அமெரிக்காவில் பரவிய நோய்கள் காரணமாகப் பல பழங்குடியினர் மருத்துவ வசதியின்றி இறந்து போயினர். இதைவிட ஐரோப்பியரின் வருகையால் இன ஒழிப்பும் ஆங்காங்கே நடந்தேறியதால் அவர்களின் சுமுகமான வாழ்க்கையில் இடைஞ்சல்கள் ஏற்பட்டன. பேச்சு வழக்கில் இருந்த வடஅமெரிக்க முதற்குடியினரின் மொழிகள் பல காலப்போக்கில் இதனால் அழிந்து போயின. தற்போது இவர்கள் (indigenous peoples of Canada) ஒன்ராறியோ, பிரிட்டிஸ் கொலம்பியா, கியூபெக், அல்பேட்டா, மனிற்ரோபா, சஸ்கச்சுவான் போன்ற பகுதிகளிலும் பரந்து வாழ்கிறார்கள். இவர்கள் இயலிட மொழி பேசுபவர் களாகவோ, ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழி பேசுபவர்களாகவோ இருக்கின்றார்கள். இவர்களின் சுமார் 13 மொழிகள் இப்பொழுதும் கனடாவில் ஆங்காங்கே பேச்சுப் பாவனையில் இருக்கின்றன. இதில் கிறீ (Cree) என்ற மொழிதான் அதிகமான பழங்குடி மக்களால் பேசப்படுகின்றது.

கனடாவின் முதற்குடிமக்களின் விளையாட்டுக்களில் ஒன்றான லாக்ரோஸ் (Lacrosse) கனடாவின் கோடைகால தேசிய விளையாட்டாக மதிக்கப்பட்டுப் பலராலும் விளையாடப் படுகின்றது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் சைபீரியாவுடன் நிலத்தொடர்பு இருந்தபோது இவர்களின் முன்னோர் தரைமார்க்கமாக இங்கு வந்திருக்கலாம் என்று ஆய்வாளர் நம்புகின்றனர். இன்று கனடாவில் பழங்குடி மக்கள் 1,401,000 மேற்பட்டவர்கள் வாழ்கிறார்கள். கனடாவின் மொத்த சனத்தொகையில் 4.4 வீதமாக இவர்கள் இருக்கிறார்கள்.



பழங்குடி மக்களின் மொத்தத் தொகையில் 28 வீதமானவர்கள் 14 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றார்கள். கனேடிய அரசு இவர்களுக்கு வேண்டிய வசதிகளை இதுவரை செய்து கொடுத்தாலும், இவர்கள் இன்றும் பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றார்கள்.

கனடா நாட்டிற்கு 1980களின் பின் வந்த தமிழர்களில் பெரும்பாலானோர் ரொறன்ரோ நகரத்திலும், ஏனையோர் மொன்றியால், வன்கூவர், கல்காரி போன்ற நகரங்களிலும் வாழ்கின்றனர். இதைவிட கனடாவின் பல பாகங்களிலும் ஆங்காங்கே சிறிய அளவில் தமிழர்கள் வாழ்கின்றனர். கனடா வந்த தமிழர்கள் கடந்த 40 வருடங்களில் பல துறைகளிலும் முன்னேற்றங்களைக் கண்டிருக்கின்றார்கள். அடுத்த தலைமுறையைச் சேர்ந்த பலர் நன்றாகப் படித்து, படிப்பிலும் வேறு பல துறைகளிலும்



சாதனைகள் பல செய்திருக்கின்றார்கள். தங்களுக்கான கடைகள், அங்காடிகள், திரை அரங்குகள் என்று தமிழ் பெயர்களையே சூட்டியிருக் கின்றார்கள். இதைவிட ஊர் ஒன்றியங்கள், பழைய மாணவர் சங்கங்கள் என்று உருவாக்கிக் கலை நிகழ்வுகளும், ஒன்று கூடல்களும் நடத்தி வாழ்ந்த மண்ணுக்கும், படித்த கல்லூரிக்கும் ஏதாவதொரு விதத்தில் உதவுகின்றார்கள்.

தமிழ் பத்திரிகைகள், தமிழ் இதழ்கள், வானொலிகள், தொலைக் காட்சிகள் என்று பல தொடர்பு சாதனங்கள் தமிழர்களால் நடத்தப்படுகின்றன. அரச உதவியுடன் தமிழ் மொழியைப் பாடசாலைகளில் கற்பிக்கப் பாடசாலைகளில் வசதிகளை ஏற்படுத்தித் தாய் மொழியாம் தமிழ் மொழியைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்றார்கள். தனிப்பட்ட முறையிலும் பலர் தமிழ் வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். கனடாவில் இருந்து தமிழ் திரைப் படங்கள், குறுந்திரைப் படங்கள் பல வெளி வந்திருக்கின்றன. பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தாலும், வெகு விரைவில் தமிழ் படங்களைத் தயாரிக்கும் நாடுகளில் கனடா இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கின்றது. மூன்று கனேடிய தமிழ் திரைப் படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதிய அனுபவம் எனக்கு இருப்பதால் இத் துறைபற்றி விபரமாக அறிந்துகொள்ள முடிந்தது. சமய ரீதியாக வழிபாட்டுச் சுதந்திரம் இருப்பதால் கனடிய சட்டதிட்டங்களுக்கு அமைய, இவர்கள் வழிபாட்டுத் தலங்களை அமைத்து வழிபாடு செய்கின்றனர்.

தமிழ் இலக்கியத்திலும், இசைத்துறையிலும் பலர் ஈடுபாடு கொண்டு சாதனை கள் படைப்பதால் தாய் நாட்டின் பார்வை மட்டுமல்ல, தமிழ் நாட்டின் பார்வையும் தற்போது கனடாவின் பக்கம் திரும்பி இருக்கின்றது. தகுதிபெற்ற பல நடன ஆசிரியர்களால் பரதநாட்டியம் மிகச் சிறப்பான முறையில் கற்பிக்கப்படுகின்றது, அதேபோல இசைத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் தமிழ் மாணவர்கள் பலர் மிகவும் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றார்கள். பாரம்பரிய கலைகளான பரத நாட்டியம், கரகாட்டம், கோலாட்டம், காவடியாட்டம், கும்மி போன்றவற்றை மாணவர்கள் விரும்பிக் கற்கின்றனர்.



இந்தக் கலைகளை வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் கற்காமல் ஏதாவது சாதனைகள் படைக்கலாம் என்ற நோக்கத்தோடும், நம்பிக்கையோடும் தொடர வேண்டும். அப்பொழுதுதான் கனடாத் தமிழர்களாலும் சாதனைகள் படைக்க முடியும் என்பதை உலகறியச் செய்ய முடியும். கனடிய அரசு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருப்பதால், அவற்றை முறையாகப் பாவித்து அதன் பலனைப் பெறவேண்டும். குறிப்பாக விளையாட்டுத் துறையில் உலக சாதனை படைக்கக்கூடிய திறமை எம்மவரிடம் இருப்பதை நாம் நன்கு அறிவோம்.

தொடரும்...

LOANS & MORTGAGES.... that meets your needs
$5,000...$35,000...$50,000...$100,000...1Million...
- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.
MORTGAGE ALLIANCE
Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages





- ஆதித்தன் -

# வட மாகாணசபை மக்களுக்கு சேவை புரியும் முழுமையான நிர்வாக மையமாக மாற வேண்டும்

வடக்கில் இன்று பரபரப்பான செய்தியாக அடிபடுவது வட மாகாண அமைச்சர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள். வடக்கில் மட்டுமல்லாமல் தென்பகுதியிலும் இவ்விடயம் அதிகம் பேசப்படும் ஒன்றாகியுள்ளது. வட மாகா ணசபை பொறுப்பேற்கப்பட்டு மூன்று வருட ங்களாகின்ற போதும் அது வினைத் திற னுடன் செயற்படவில்லை என்கின்ற பொது வான விமர்சனம் உண்டு. எனினும், வட மாகாண சபையின் பொறுப்பான அமைச் சர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டிருக் கின்றார்கள் என்கின்ற குற்றச் சாட்டு வடக்கில் வாழும் தமிழ் மக்களை கடும் விசனத்திற்குள்ளாக்கியுள்ளது.

மீன்பிடி, போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் மீது நான்கு குற்றச் சாட்டுக்களும், சுகாதாரத்துறை அமைச்சர் ப.சத்தியசீலன் மீது ஐந்து குற்றச்சாட்டுக் களும், கல்வி பண்பாட்டுத்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குரு-குலராஜா மீது ஒன்பது குற்றச்சாட்டுக் களும், விவசாயம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது பத்து குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப் பட்டன. இந்த அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை வட மாகாணசபை யின் எதிர்கட்சியினர் சுமத்தியிருந்தால் அது ஒரு சாதாரண விடயமாக, எதிர்ப்பு அரசியலாக பார்க்கப்பட்டிருக்கும். ஆனால். ஆளும் கட்சி உறுப்பினர்களே இந்தக் குற்றச்சாட்டுக்களை முன் வைத்தனர்.

கனடாவின் மூத்த தமிழ் இதழ்
27 வது ஆண்டில்
விளம்பரம்
VLAMBARAM™

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| பத்திரிகை முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | செல்வி ரஞ்சன் |
| | தாரணி இந்திரராஜ் |

பதிப்பு: Canyon Press Inc.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை பல தருணங்களில் முதலமைச்சர் விக்னேஸ் வரன் மறுத்திருக்கின்றார். குறித்த அமைச் சர்கள் நேர்மையானவர்கள் என்றும் வாதிட் டிருக்கின்றார். குறிப்பாக, அமைச்சர்களான குருகுலராஜாவையும், ஐங்கரநேசனையும் நேர்மையானவர்கள் என நியாயப் படுத்தி யிருக்கிறார். ஒரு நிகழ்வில் ஐங்கரநேச-னைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்



நேர்மையானவர், திறமை வாய்ந்த அமைச் சர் என்று கூறியதோடு, அவர் பனங்காட்டு நரி சலசலப்பிற்கு அஞ்ச மாட்டார் என்றும் குறிப்பிட்டார். எனினும், இந்த அமைச்சர் கள் மீதான குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என முதலமைச்சருக்கு கொடுக்கப்பட்ட அழுத் தங்கள் காரணமாக அவர் ஒரு விசார ணைக் குழுவை அமைத்தார். குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு விசாரணைக் குழுவிடம் பணித்திருந்தார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. ஓய்வுபெற்ற நீதிபதி களான எஸ். தியா-கேந்திரன், எஸ். பரம ராஜா, ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் செ.பத்மநாதன் ஆகி-யோர் அக்குழுவில் உள்ளடங்கியிருந்தனர். அமைச்சுக்களில் இடம்பெற்றதாகக் கூறப் படும் அதிகாரத் துஷ்பிரயோகம், மோசடி கள், ஊழல் குற்றச்சாட்டு உள்ளிட்ட குற்றங்களை விசாரணை செய்து 82 பக்க அறிக்கையை கடந்த மே மாதம் 19ஆம் திகதி இக்குழு கையளித்துள்ளது.

கடந்த 7ம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வில் குறித்த அறிக்கையை முதலமைச்சர் சமர்ப்பித்து உரையாற்றியதோடு, அதன் பிரதியை அவைத்தலைவருக்குக் கையளித் தார். அந்த அறிக்கையில் கல்வி, பண் பாட்டு அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குரு-குலராஜா, விவசாயம், கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன கூட்டுறவு மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகிய இருவர் மீதே கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன. சுகாதார அமைச்சர் ப.சத்திய-லிங்கம் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக் கப்படவில்லை என்றும், போக்கு வரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன் மீதான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப் பட்டன ஆனால், சாட்சியமளிக்க எவரும் முன்னி லையாகவில்லை என்றும் அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் இருவரும் குற்றச் சாட்டுக்களிலி ருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

*1.'அமைச்சர் குருகுலராஜா அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார். கல்வி அமைச்சின் செயலாளரின் அதிகாரத்தை, அமைச்சர் தனது கையில் எடுத்துள்ளார். இடமாற்றங்களின்போது அரசியல் செல்வாக்குச் செலுத்தப் பட்டுள்ளது. செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை முறையற்ற விதத்தில் அமைச்சர் பயன்படுத்த வகைசெய்யும் அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப் பட்டிருக்கின்றது. இதில் செயலாளரும் கையெழுத்திட்டு உடந்தையாக இருந்தி ருக்கிறார். இப்படியானதொரு அமைச்சர வைப் பத்திரம் சமர்பிக்கப்பட்ட போது தலைமைச் செயலாளரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்துள்ளார். வடக்கு மாகாண சபை திறனற்றுச் செயற்படு கின்றது என்ற குற்றச்சாட்டு மக்களால் முன்வைக்கப்பட்டு வருவதை ஆமோதிப் பது போன்று இது உள்ளது.*

*மிக முக்கியமாக, கிளிநொச்சி மாவட்ட த்தில் பாடசாலை மாணவி ஒருவர் பாடசாலை அதிபரால் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டார். சம்பவம் குறித்துக் குரல் எழுப்பிய பாடசாலை ஆசிரியரை, கி-ளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பா-ளருடன் இணைந்து, கல்வி அமைச்சர் இடமாற்றம் செய்துள்ளார். இது மிக மோசமான மன்னிக்க முடியாத குற்றம். எனவே, கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உடனடியாக அமைச்சுப் பதவியிலிருந்து விலக வேண்டும். அத்துடன் கல்வி அமைச்சின் செயலாளரும் அந்தப் பதவில-யிருந்து விலக வேண்டும்'*

*2. 'விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மீது பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. ஆளும் கட்சி உறுப்பி-னரான ஜி.ரி.லிங்கநாதனுடன் வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா வுடன் விசாரணைக் குழுவிடம் முன்னிலை யாகியிருந்தார். அமைச்சர் பொ.ஐங்கர-நேசனிடம், தவராசா குறுக்கு விசாரணை செய்திருந்தார். அதிகார வரம்பு மீறல், முறைகேடுகள், நிதி மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.*

*மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் இருக்கின்ற நிலையில், இளையவரான ம.பற்றிக் டிறைஞ்சன் இவரது அமைச்சின் செயலராக நியமிக்கப் பட்டார். இது இவர் செய்கின்ற மோசடி யான நடவடிக்கைகளுக்கு இணங்கிச் செயற்படுவதற்காகவே மேற்கொள்ளப் பட்டதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.*

*மரம் நடுகை, பார்த்தீனியம் ஒழிப்பு, நீர் ஆய்வு விடயங்களை சுற்றாடல் அமைச்சர் என்ற கோதாவில் முன்னெடுத்துள்ளார். சுற்றுச்சூழல் விடயம், 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒருங்கியைவு நிரலில் உள்ளது. இவற்றை கொழும்பு அரசுடன் சேர்ந்து திணைக்களம் உருவாக்கி மேற்கொண்டிருக்க வேண்டும். அப்படியல்லாமல் அமைச்சரை முன்னி லைப்படுத்தியே இவரது செயற்திட்டங்கள் அமைந்துள்ளன. இத்தகைய செயற்றிட்டங் களின் தொடக்க நிகழ்வுகளுக்கு முதல மைச்சர் அழைக்கப்பட்டிருக்கின்றார். அவரே இவற்றை இயக்குவதான பின்னணி யில் இருப்பதான மாயையை ஏற்படுத்தும் நோக் கில் செயற்பட்டுள்ளார். அதனை வைத்துத் தனது கைங்கரியங்களை நிறைவேற்றியு ள்ளார்.*

*இவரது அமைச்சுக்கு வழங்கப்பட்ட தண் ணீர் பவுசர்களை, உள்ளூராட்சி மன்றங் களுக்கு வழங்காமல் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.*

*விவசாயக் கிணறு புனரமைப்பு, புழுதி யாற்று ஏற்று நீர்பாசனத் திட்டங்களில் நிதி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.*

*வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையா-ளராகக் கடமையாற்றிய திருமதி மதுமதி வசந்தகுமார், இவரது அழுத்தங்கள் காரணமாகவே மாகாண சபை சேவையை விட்டு வெளியேறினார் என்று விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது. வடமராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரை பதவி நீக்கம் செய்தமை உள்ளிட்ட விடயங்களில் அமைச்சர் நேரடியாகத் தலையீடு செய்து அழுத்தங்களை வழங்கியுள்ளார்.*

*இதேபோன்று 'யாழ்கோ'விலும் தலையீடு செய்துள்ளார். இதனால் விசாரணைக் குழு விசனமடைகின்றது. பிந்திய செய்தியாக, யாழ்கோ பணிப்பாளர் சபை உறுப்பினர் கள் நியமனத்திலும் அழுத்தம் கொடுத்து*

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

MATH WORLD
MOST ADVANCED TALENTED HELP
- A private math institute -

"Teaching Experience in Math for more than 23 years"

*Students & Parents!*

# Advanced Function G12

for School year Sept. 2017, Starting July 2nd

90%

**& above**

With more than 23yrs of experience in teaching math

Guaranteed Results
**Money Back Guaranteed**

G11- Function
G10- Advanced level
Starting 1st week of July

Limited Space

**416-666-5515**

61 Snowy Owl Way (Markham & Steeles)

# இனம் மொழி கடந்து, உதவும் மனப்பான்மையை இயற்கையே ஏற்படுத்துகின்றது!

**-விகிர்தன்**

வடக்கில் கடுமையான வறட்சியும், தெற்கில் கடும் மழையுமான ஒரு காலநிலை இலங்கையில் தற்போது நிலவுகின்றது. வடக்கில் பல பிரதேசங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தென்னிலங்கையின் பல பகுதிகளில் பெய்த கடும் மழையினால் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

தெற்கின் பல பிரதேசங்களில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கு, மண்சரிவுகள் காரணமாக பல உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களில் தங்கியிருக்கின்றனர். தற்போது நிலைமை சற்று தணிவடைந்திருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொதுவாகவே வறட்சி நிலவினாலும் வடக்கில் அதன் பாதிப்பு அதிகமாகவுள்ளது. வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 240 குடும்பங் களை சேர்ந்த 2 இலட்சத்து 40 ஆயிரத்து 531 பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என வட மாகாண அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாட்டங்களில் பயிர்செய்கைக்குப் போதுமான மழை வீழ்ச்சி கிடைக்காமையினால் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பெரும் இழப்புக்களை சந்தித்துள்ளனர். குறிப்பாக, வடக்கில் அதிக வறட்சி முல்லைத்தீவு மாவட்டத்திலேயே நிலவுகின்றது. அம் மாவட்டத்தில் 35 ஆயிரத்து 670 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 20 பேர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணிமுறிப்பு, விஸ்வமடு, மாந்தை கிழக்கு, துணுக்காய், மல்லாவி உள்ளிட்ட சில பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் வறட்சியினால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் பயிர் செய்கைக்கு போதுமான நீர் கிடைக்காமையினால் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதுடன், தோட்டப்பயிர் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்திலும் நெடுங்கேணி, செட்டிக்குளம் மற்றும் சிதம்பரபுரம் உள்ளிட்ட சில பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுனியா ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்களும் வறட்சி காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் விவசாய நிலங்களும் நீரின்றி கருகிப்போயுள்ளன. முல்லைத்தீவில் நந்திக்கடல்- வட்டுவாகல் களப்பில், நீரின் வெப்பநிலை அதிகரித்துள்ளமை காரணமாக மீன்கள் இறந்து மிதக்கின்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது. வட்டுவாகல் களப்பில் கடந்த சில தினங்களாக இறந்த நிலையில் இலட்சக் கணக்கான மீன்கள் கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் வறட்சி காரணமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ். தீவகப் பகுதிகளான வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்துறை, காரம்பொன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் கூட இப்பகுதி மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதேவேளை, தென்னிலங்கை பகுதிகளில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோரில், 4,012 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 655 பேர் இன்னும் 159 முகாம்களில் உள்ளனர் என்று அனர்த்த முகாமைத்து மத்திய நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இயற்கை அனர்த்தங்களினால், அங்கு 12 மாவட்டங்களைச் சேர்ந்தோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மாவட்டங்களில், 155,474 குடும்பங்களைச் சேர்ந்த 603,105 பேர் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வெள்ளப்பெருக்கு, மண்சரிவு காரணமாக 212 பேர் மரணமடைந்தனர். 152 பேர் காயமடைந்தும் 78 பேர் காணாமல் போயும் உள்ளனர். இந்த அசாதாரண நிலைமை காரணமாக, 3,059 வீடுகள் முழுமையாகவும் 20,285 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இவையெல்லாம் அறிக்கைகளிலும், ஊடகங்களிலும் வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள். இவ்வாறானதோர் நிலைமையில், இயற்கை அனர்த்தம் காரணமாக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள தெற்கு மக்களுக்கு வடக்கிலும் கிழக்கிலுமிருந்து உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள வறட்சிப் பாதிப்பானது தென்னிலங்கை அனர்த்த பாதிப்புகளுடன் ஒப்பிடுகையில் மோசமானது. எனவே, வடக்கு கிழக்கு மாகாண பொதுமக்கள் தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை தாமாகவே முன்வந்து வழங்கி வருகின்றனர். இதில் எவ்வித அரசியல் பின்னணியோ, அழுத்தங்களோ இல்லை. பொதுவாக உதவும் மனப்பான்மையுடன் விரும்பி இவ்வுதவிகள் வழங்கப்படுகின்றன.

இது, இனங்களுக்கிடையேயான ஒரு நல்லிணக்க, நட்புறவு வெளிப்பாடாக அமையும் என அரசாங்கம் கருதுகின்றது. உதவி வழங்கும் வேண்டுகோள்கள் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள அரசாங்க நிறுவனங்களாலும் விடுக்கப்பட்டாலும் அந்த வேண்டுகோளுக்கும் அப்பால், மக்கள் தாங்களாகவே விரும்பி இவ்வுதவிகளை வழங்குகின்றனர் என்பதுதான் உண்மை.

அரசியல்வாதிகளும், அவர்கள் மத்தியிலுள்ள இனவாதிகளும் தமிழ், சிங்கள பொது மக்களிடையே நம்பிக்கையீனங்களையும், கசப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வந்தாலும், ஒரு பாதிப்பு என்று வரும்போது உதவுகின்ற மனப்பான்மை சாதாரண மக்களிடையே உள்ளது. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலத்தில் கூட இவ்வாறான உதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த 2004ம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கையை அதிரடியாக தாக்கிய சுனாமியால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். பாரிய சொத்தழிவுகள் ஏற்பட்டன. இலங்கையின் வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளிலேயே சுனாமியினால் பேரழிவுகள் ஏற்பட்டன. வடக்கில் ஏற்பட்ட சுனாமி மீட்புப் பணிகளில் துரிதமாக ஈடுபட்டவர்கள் அப்போதிருந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரும் (TRO) விடுதலைப்புலிகள் போராளிகளுமே என்பதை மறுக்க முடியாது.

அவர்கள் வடக்கில், இப்பணிகளை மேற்கொண்டதோடு, தெற்கில் காலியிலும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். காலியில் ஒரு சிங்களக் கிராமம் வெள்ளத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த போது - அம்மக்களை மீட்கவோ, அவர்களுக்கு உணவுப் பொருட்களை சென்று வழங்கவோ முடியாத நிலை ஏற்பட்டிருந்த போது, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் குழுவொன்று துரிதமாக செயற்பட்டு, அம்மக்களுக்கு நேரில் சென்று உணவுப் பொருட்களை வழங்கியது.

அக்குழுவில் விடுதலைப்புலிகளின் போராளிகளே உள்ளடங்கியிருந்தனர் என்பது அங்கிருந்த சிங்கள மக்களுக்கும் தெரியும். தாங்கள் வெள்ளத்தால் சுற்றிவளைப்பட்டு பட்டினி நிலையில் இருந்தபோது, விடுதலைப்புலிகளே முதலாவதாக தங்களுக்கு உணவுப் பொருட்களை தந்துதவினர் என அந்த மக்களே தெரிவித்திருந்தமை அப்போது சிங்கள ஊடகங்களிலும் வெளியான செய்தி. சுனாமி மீட்பு நடவடிக்கைகளில் சிறப்பாக செயற்பட்டதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரணதுங்க சான்றிதழும் கேடயமும் வழங்கி கௌரவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்போதும், வடக்கு- கிழக்கில் ஏற்பட்டுள்ள வறட்சி பாதிப்புகளுக்கும் அப்பால், தெற்கில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தங்களால் இயன்ற நிவாரண உதவிகளை தமிழ் மக்கள் வழங்குகின்றனர்.



நல்லிணக்கம், நட்புறவு என அரசாங்கம் கூறிக்கொண்டிருந்தாலும், இயற்கையே இவற்றை ஏற்படுத்துகின்றது. இயற்கையினால் ஏற்படுகின்ற அனர்த்தங்கள், பாதிப்புகள் இனம், மொழி, மதம் கடந்து ஒருவருக்கொருவர் உதவுகின்ற மனநிலையை இயல்பாகவே ஏற்படுத்தி விடுகின்றது. இயற்கையால் ஏற்படுத்தப்படுகின்ற இந்த உணர்வை தக்கவைத்துக் கொள்வதும். அதனை நீடிக்கும் படியான வழிவகைகளை மேற்கொள்வதும்தான் மனிதர்கள் மேற்கொள்ள வேண்டிய பணியாகும்.


LAW OFFICE

STEFANO FORTINI

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# நாமும் நமது இல்லமும் - 489

# ஆதன வியாபாரம் மாற்றம் பெறுகின்றதா?

**ராஜா மகேந்திரன்**, P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



ஆட்சியில் இருக்கும் லிபரல் அரசு ஆதன வியாபாரத்தை கட்டுப்படுத்த ஏப்பிரல் 20, 2016 ஆம் ஆண்டு 16 அம்சத்திட்டம் ரொறன்ரொ பெரும்பாகத்தையும் அதனைச் சுற்றியும் உள்ள சில பகுதிகளிலும் கொண்டு வரப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆதன வியாபாரத்தில் நெகிழ்வுத் தன்மை ஏற்பட்டுள்ளதனை அறியக்கூடியதாக உள்ளது. ஏப்ரல் 20, 2017 இல் இந்தப் புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டது. ஏறக்குறைய ஆறு (6) கிழமைகள் கடந்த நிலையில் மாற்றத்தை காணக்கூடியதாக உள்ளது. இந்தக் காலப்பகுதியில் நடந்த ஆதன வியாபாரத்தின் முடிவுகளை இங்கே பார்க்கலாம்.

கடந்த ஆண்டின் குறிப்பிட்ட காலப்பகுதியில் விற்கப்பட்ட வீடுகளுடன் ஒப்பிடும்போது எண்ணிக்கை ஏறக்குறைய 30% இனால் இறக்கம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் சந்தைப் படுத்த ஆதனங்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. ரொறன்ரோவின் வட பகுதியில் அமைந்திருக்கும் றிச்மன்ட்கில் பகுதியில் 61% இறக்கமும், மார்க்கத்தில் 46%, நியூ மார்க்கட்டில் 44% உம் இறக்கம் ஏற்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் 23% இறக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பெறுமதியில் மேலும் மாற்றங்கள் அண்மையில் ஏற்படுகின்றன. இந்தக் கணக்கீட்டில் அடுக்குமாடி மனை வியாபாரம் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இந்தக் குறிப்பிட்ட காலத்தில், முந்தைய மாதத்துடன் ஒப்பிடும்போது விலையில் ஏறக்குறைய 5% இறக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆதனம் வாங்க இருக்கும் பலர் எதிர் காலத்தில் என்ன நடக்கலாம் என்ற அங்கலாய்ப்பில் இருப்பதால் பொறுமையாக உள்ளார்கள். ஏற்கனவே வாங்கியிருந்த வர்கள் தாம் இருக்கும் வீட்டை விற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பவர்களே, தமது ஆதனத்தை விற்க முற்படுகிறார்கள். ஒரு சிலர் அதிகரித்த விலையை, ஆதனத்தை விற்று எடுத்துக்கொள்ளலாம் என்ற மனப் பாங்கிலும் உள்ளார்கள்.

சந்தையில் விற்கப்போட்டிருக்கும் வீடுகளுக்கு வாங்குபவர்கள் செல்வது கணிசமாகக் குறைந்துள்ளது. இதனால் சில வாங்குபவர்கள் நல்ல விலையில் பெறக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. இதற்கு ஓர் உதாரணத்தை தெரியப்படுத்தலாம். $750,000 இற்கு சந்தைப்படுத்தப்பட்ட ஆதனம் $650,000 இற்கு விற்கப்பட்டுள்ளது. இவ்வருடம் (2017) ஜனவரி தொடக்கம் ஏப்ரல் மத்தியகாலம் வரை வாங்கிய வீடுகள்,




மனைகள் ஒப்பீட்டு அளவில் அதிகூடிய விலையில் கைமாறியதனை நாம் காணலாம். இந்தக் காலகட்டத்தில் கொள் வனவு செய்யப்பட்ட ஆதனங்களின் Closing date வரும்போது இவற்றின் மதிப்பீட்டு விலைகள் (Appraisal value) கொள்வனவு செய்த விலையை விடக் குறைவாக வருவதனை காணக்கூடியதாக உள்ளது.

இதனால் சிலர் தாம் ஏற்கனவே ஒப்பமிட்டு ஆரம்ப முதலீடு செய்த (deposit) ஆதனத்தைக் கொள்வனவு செய்வதனைத் தவிர்க்க பார்க்கின்றார்கள். இதன் எதிர்கால பாதகங்களை தகுந்த சட்ட வல்லுனருடன் ஆலோசனை பெற்ற பின்பே முடிவு எடுப்பது எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சிக்கல்களை ஓரளவாவது தவிர்க்கக் கூடியதாகலாம். அடமானக்கடன் பெறுவதில் சிலரிற்கு இடர்கள் வருவதனையும் காணக்கூடியதாக உள்ளது. மேலதிக பணத்தை முதலீடு செய்தே ஆதனத்தை வாங்க வேண்டியுள்ளது. இந்த 16 அம்சத்திட்டத்தின் பலாபலன்கள் எதிர்காலங்களில் தான் முற்றாகத் தெரியவரலாம். இன்றைய காலகட்டத்தில் சந்தைப்படுத்துபவர்கள் நிச்சயமாகத் தமது ஆதனத்தை விற்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்களாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

எனவே விற்க வேண்டி நிலையில் இருப்பதால் வாங்குபவர்களிற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகவும் இருக்கக் கூடும். பொதுவாக புதிய இறுக்கங்கள் அரசுகளினால் கொண்டுவரப்படும்போது, இவ்வாறான இறுக்கமான நிலைகளை ஏற்கனவே சில தடவை பார்த்திருக்கின்றேன்.

(தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...)

NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**
Cell: 416.816.7994    Email:neel900@hotmail.com

La Capitale Financial Group    INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.    Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA



# அத்தனைக்கும் ஆசைப்படு!

## சத்குரு வாசுதேவ்

### மனவளம்

ஒருவன் தன்னுடைய உண்மையான திறமையைப் பயன்படுத்த தவறுவது சமூகத்துக்கு இழைக்கும் மாபெரும் குற்றம்!

கலைத்துறையைச் சேர்ந்த ஒருவர் என்னைச் சந்தித்தார். 'ஒரு செல்வந்தனுக்குக் கிடைக்கும் மரியாதையும் மதிப்பும், பிரம்மாவுக்கு இணையான ஒரு படைப்பாளிக்குக் கிடைப்பதில்லையே....ஏன்? என்று வருத்தத்துடன் கேட்டார். உண்மை யில் யார் படைப்பாளி?

படைப்பு ஏற்கனவே கச்சிதமாக நிகழ்ந்து முடிந்து விட்டது. இருப்பதையெல்லாம் நீங்கள் இப்படியும் அப்படியுமாக மாற்றி அமைத்துக்கொண்டு இருக்கிறீர்களே தவிர, புதிதாக எதைப் படைத்தீர்கள்?
ஒரு விஞ்ஞானக் கதை தெரியுமா?

இன்றைக்கு ஐம்பது வருடங்களுக்குப் பிறகு ஒரு தினம்...உலகத்தின் முக்கிய விஞ்ஞானிகள் எல்லோரும் கடவுளின் முன்ஒன்று கூடினர். மரணத்தைத் தள்ளிப்போடும் மருந்துகளைக் கண்டுபிடித்துவிட்டோம். உயிரை உருவாக்கக் கற்றுவிட்டோம். உணவையும் தண்ணீரையும் தேவையான அளவுக்குக் தயாரித்துவிட்டோம். உலகத்தின் எந்த மூலையில் நடப்பதையும் உடனடியாகக் கவனிக்கும் திறமை பெற்றுவிட்டோம். கடவுளே, உன் எல்லா வேலைகளையும் இப்போது நாங்களே செய்து கொண்டு இருக்கிறோம். இனிமேல் நீ எதற்கு? பேசாமல் ரிட்டையராகிவிடு!' என்றனர்.

கடவுள் சிரித்தார். 'ஏதாவது ஒன்றைப் படைத்துக் காட்டுங்கள். நான் ஓய்வெடுக்கப் போய்விடுகிறேன்' என்றார்.

விஞ்ஞானி தன் பக்கத்தில் இருந்த களிமண்ணை எடுத்துக்காட்டி, 'இதை ஓர் உயிராக்கிக் காட்டட்டுமா? என்று தலையை நிமிர்த்திக் கேட்டார்.

'அந்தக் களிமண் நான் கொடுத்ததாயிற்றே! முதலில் களிமண்ணை உருவாக்கிக் காட்டுங்கள்' என்றார் கடவுள். விஞ்ஞானிகள் தலை குனிந்தனர். இயற்கை கொடுத்ததை ஆதிமனிதன் தனக்குத் தெரிந்தவரை பயன்படுத்தினான். கற்களை ஆயுதங்களாக்கினான். மண்கலங்கள் தயாரிக்கக் கற்றுக் கொண்டான். மரங்களால் வீடுகளை அமைத்தான்.

நீங்கள்? அதே இயற்கை தந்தவேறு பொருட்களை வைத்து வெடிகுண்டுகளையும், அணுமின் நிலையங்களையும் உருவாக்குகிறீர்கள். ராக்கெட்டுகளாகவும், விண்வெளிக் கலங்களாகவும் அவற்றை மாற்றிப் பயன்படுத்துகிறீர்கள். நீங்கள் கண்டுபிடிக்காமல் விட்ட உபயோங்களை அடுத்துவரும் தலைமுறைகள் கண்டுபிடிக்கும் அவ்வளவுதான்!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

பூமி உருவான தினத்திலிருந்தே காற்று இருக்கிறது. பல்வேறு அலைவரிசைகளைத் தனித்தனியே கொண்டு சேர்க்கும் அதிசய குணத்தை அன்றிலிருந்தே அது தனக்குள் வைத்துக் கொண்டுதான் இருக்கிறது. அதைக் கவனித்துத் தனக்கு உபயோகமாக தொலைக்காட்சியையோ, செல்போனையோ தயாரித்துக்கொள்ள மனிதனுக்குத்தான் பல கோடி வருடங்களாயிற்று! ஏற்கனவே இருப்பதைத்தான் உங்களுக்கு வசதியாக விதம் விதமாகத் திருத்துகிறீர்கள். மாற்றி அமைக்கிறீர்கள். பயன்படுத்துகிறீர்கள். மற்றபடி, நீங்கள் புதிதாக எதைப் படைத்துவிட்டதாகப் பெருமை கொள்ள முடியும். நீங்கள் ஓவியராக இருக்கலாம். எழுத்தாளராக இருக்கலாம். பாடகராக இருக்கலாம். எந்தக் கலைத் துறையிலும் இருக்கலாம்.

நீங்கள் செய்வது முதலில் உங்களுக்கு ஆனந்தம் தர வேண்டும். அப்போதுதான் உங்கள் திறமையை உங்களுக்கு விரும்பமான விதத்தில் வெளிப்படுத்த முடியும். அப்படி வெளிப்படுத்தும் விதத்தில், மற்றவர்கள் மகிழ்ச்சியோடு இருப்பதற்கும் நீங்கள் உபயோகமாக இருக்கிறீர்களா? பாரமாக அழுத்தும் பிரச்சினைகளை மறந்துவிட்டு, சிலமணி நேரமாவது அவர்கள் அமைதியாக இருக்க நீங்கள் பயன்படுத்துகிறீர்களா? அது போதும் நீங்கள் சிறந்த படைப்பாளி என்று கொண்டாடப்படுவதை விட அது மேன்மையானது!

உங்களைவிட அடுத்தவர் செல்வாக்கோடு இருந்தால், இருந்துவிட்டுப் போகட்டுமே? உங்களைக் குறைத்து மதிப்பிட்டு விட்டுத்தான் போகட்டுமே?

நீங்கள் எந்த மதத்திலிருந்து வந்தாலும், உங்கள் கடவுள் எப்படி இருக்கிறார்? அவர் மீது பூச்சொரிந்து பூஜிப்பதால், உடனே- சலுகைகள் காட்டுவதுமில்லை. அவர் மீது காறித் துப்புவதால், உடனே தண்டனை கொடுப்பதும் இல்லை. போற்றலையும், தூற்றலையும் பொருட்படுத்தாமல், அவருடைய செயலை நூறு சதவிகித ஈடுபாட்டோடு தொடர்ந்து செய்கிறார். உண்மையான படைப் பாளிக்கு அதுதானே அழகு?

கலைத்துறை என்றில்லை. எந்தத் துறையானாலும் உங்களுக்கு மட்டுமல்லாது சுற்றியுள்ளவர்களுக்கும் ஆனந்தமான சூழ்நிலையை உருவாக்கித் தாருங்கள். அன்பைக் குழைத்து முழுமையான ஈடுபாட்டுடன் உங்கள் திறமையை வெளிப்படுத்துங்கள்

புகழும், செல்வாக்கும் தாமாகவே வந்து சேரும்!

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

### தெய்வத்தை எங்கே தரிசிக்க முடியும்?

“ரவீந்திரநாத் தாகூர் சிறந்த கவிஞர். இயற்கையைப் பற்றி அழகைப்பற்றி தெய்வீகத்தைப்பற்றி மிக அற்புதமான கவிதைகள் எழுதியவர்.

ஒரு நாள் அவருடைய மூத்த உறவினர் ஒருவர் தாகூரிடம், 'மொழியின் மீது உள்ள ஆளுமையால் வார்த்தைகள் உனக்கு வந்து விழுகின்றன. ஆனால், நீ எழுதும் அதே உணர்வுகளை உண்மையிலேயே நீ அனுபவித்திருக்கிறாயா?' என்று கேட்பார். தாகூர் பதில் சொல்ல இயலாமல் தலைகுனிந்தார்.

'அதற்கு வாழ்க்கையை நீ இன்னும் தீவிரமாக வாழப்பழக வேண்டும்' என்று அந்த உறவினர் சொல்லிச் சிரித்துவிட்டுப் போய்விட்டார். மழை பெய்து ஓய்திருந்த ஒரு மாலை நேரம். சூரிய அஸ்தமனத்தை ரசிக்க, தாகூர் கடற்கரை நோக்கிச் சென்று கொண்டு இருந்தார். தெருவோரங்களில் ஆங்காங்கே தண்ணீர் அழுக்குக் குட்டைகளாகத் தேங்கிக் கிடந்தது. அதில் கால் வைத்து விடக்கூடாது என்பதற்காகக் குனிந்து பார்த்தபடி, நடந்து போய்க் கொண்டு இருந்தார் தாகூர்.

திடீரென்று பிரமித்துப் போனார். கடற்கரையில் போய் அவர் கவனித்து ரசிக்க நினைத்த சூரிய அஸ்தமனம் ஒரு அழுக்குக் குட்டையில் நிகழ்ந்து கொண்டு இருந்தது. தாகூரின் கண்கள் உணர்ச்சிப் பெருக்கால் ததும்பின, அந்தக் கணமே பிரபஞ்சத்தின் மேன்மையான அர்த்தத்தை உணர்ந்துவிட்ட பரவசம் அவர் முகத்தில் பிரதிபலித்தது. தன் உறவினரின் வீட்டுக்கு ஓடினார். தாகூரைப் பார்த்ததுமே அந்த உறவினருக்குப் புரிந்துவிட்டது. 'உண்மையை நீ தரிசித்துவிட்டாய். அதை உன் முகத்தில் காண முடிகிறது' என்றார் அவர்.

இப்படி ஒவ்வொரு சின்ன விடயத்துக்குள்ளும் தெய்வீகம் புதைந்துள்ளது. வாழ்க்கையை முழுமையான தீவிரத்தோடு வாழாததால், நீங்கள்தான் அதைக் காணத் தவறுகிறீர்கள்!'






# அறிவியல் கதிர் - ஆழ்கடல் உயிரினங்களுக்கு ஆபத்து!

**- பேராசிரியர் கே. ராஜூ-**

கடல் உயிரினங்களுக்கு ஆபத்து பல வடிங்களில் பல திசைகளிலிருந்து வருவதுண்டு. சுற்றுப்புறங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் சேருவதால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. அது வன உயிரினங்கள், அவற்றின் இருப்பிடங்கள் மற்றும் மனிதர்களுக்கு மோசமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. பிளாஸ்டிக்கினால் ஏற்படும் பிரச்சினையே அதன் மக்காத தன்மைதான். காலகாலத்துக்கு அழியாமல் இருந்து சுற்றுப்புறத்துக்கு சேதாரத்தை ஏற்படுத்துவதில் அதற்கு நிகரில்லை. இதுவரையில் அதன் கொடூரங்கள் ஆறுகள், நீர்நிலைகள், கடற்கரையோரப் பகுதிகள் வரையில் மட்டுமே நீளும் என நினைத்திருந்தோம். ஆனால் பிரிட்டனில் உள்ள பிரிஸ்டல், ஒக்ஸ்போர்ட் ஆகிய இரு இடங்களில் உள்ள ஆய்வாளர்கள் நுண்ணிய பிளாஸ்டிக் வடிவில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள் கடல் ஆழத்தில் உள்ள உயிரினங்களுக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடியவை என்று கண்டுபிடித்துள்ளனர். அழகு சாதனங்களிலும் பற்பசை போன்ற சுத்தப்படுத்தும் பொருட்களிலும் உள்ள ஐந்து மி.மீ. நீளத்திற்குக் குறை வான நுண்ணிய பிளாஸ்டிக் நார்கள், பிளாஸ்டிக் சிறுமணிகள் (microbeads) எல்லாமே நுண்ணிய பிளாஸ்டிக் பொருட்கள் (microplastics) என அழைக்கப்படுகின்றன. செயற்கை இழைகளினால் ஆன ஆடைகளைத் துவைக்கும்போது பொலியெஸ்டர், நைலோன், அக்கிரிலிக் அமிலக் கழிவுகள் போன்ற நுண்ணிய பிளாஸ்டிக் பொருட்கள் கடலுக்குள் நுழைந்துவிடுகின்றன. மத்திய அட்லாண்டிக், தென்மேற்கு இந்துமா கடல் ஆகிய இரு இடங்களில் சோதனை மேற்கொண்ட ஆய்வாளர்கள் கடல் ஆழத்தில் செல்லும் (தொலைவிலிருந்து இயக்கக்கூடிய) வாகனத்தைப் பயன்படுத்தி கடல் உயிரிகளை அவர்கள் சேகரித்தனர். 300-லிருந்து 1800 மீட்டர் ஆழத்தில் உள்ள ஹெர்மிட் நண்டுகள், கல்லிறால்கள் (lobsters), கடல் வெள்ளரிகள் போன்ற பல்வேறு கடல் உயிரிகளில் பிளாஸ்டிக் நுண்நார்கள் இருப்பதை தங்களது ஆய்வில் கண்டுபிடித்தனர். இவ்வளவு ஆழத்தில் இருக்கும் உயிரிகள் நுண்பிளாஸ்டிக் பொருட்களை உட்கொள்ளக் கூடியவை என்பதற்கான முதல் ஆதாரம் இது. தரையில் உள்ள மாசுபடுத்தும் பொருட்களிலிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ள கடல் ஆழத்தில் இத்தகைய நுண்பிளாஸ்டிக் பொருட்களைக் கண்டுபிடிக்க முடியும் என்பது நமக்கு ஓர் எச்சரிக்கை மணி என்கிறார் இந்த ஆய்வுக்குழுவின் தலைவர் மிஷேல் டேலர்.



ஆழ்கடல் உயிரிகள்

கடலின் மேலடுக்குகளிலிருந்து கடல் ஆழத்திற்குப் பொழியப்படும் உயிரிப் பொருள் கடல் பனி (marine snow) என அழைக்கப்படுகிறது. கடல் ஆழத்தில் உள்ள உயிரினங்களுக்கு இது உணவாகிறது. நுண்பிளாஸ்டிக் பொருட்கள் கடல் பனி அளவே இருக்கும். துணி துவைக்கும் கருவியை உபயோகிக்கும் ஒவ்வொரு முறையும் 7 லட்சம் நுண்நார்கள் கழிவு நீரில் செலுத்தப்படும் என பிரிட்டனில் உள்ள பிளைமௌத் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அண்மையில் செய்த ஆய்வு தெரிவிக்கிறது. இந்த நுண்நார்களில் பெரும்பகுதி சுற்றுப் புறத்தில் கலந்துவிடும். பிளாஸ்டிக் பொருட்கள் நமக்கு பல வழிகளில் அன்றாடம் பயன்படுகின்றன. ஆனால் கடல் ஆழத்தில் உள்ள நீரில் நுண்பிளாஸ்டிக் மாசுபாடு அதிகரித்துக் கொண்டே வந்தால் அது கடல்வாழ் உயிரினங்களுக்குப் பெரும் கேடு விளைவிப்பதில் போய் முடியும். மேம்பட்ட கழிவுப் பொருள் மேலாண்மை நடைமுறைகள் மூலம் கடல் சார்ந்த வாழ்விடங்களில் பிளாஸ்டிக், நுண்பிளாஸ்டிக் கழிவுகள் சேராமல் தடுப்பது மிகமிக முக்கியமானது.

அழகு சாதனங்களிலும் சுத்தப்படுத்தும் கருவிகளிலும் பிளாஸ்டிக் சிறு மணிகள் பதிப்பது 2017 இறுதிக்குள் தடை செய்யப்படும் என பிரிட்டன் அண்மையில் அறிவித்திருக்கிறது. பிளாஸ்டிக்கினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுவரும் சேதாரங்கள் பற்றி மக்கள் அவையின் தணிக்கைக் குழு சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்தே பிரிட்டிஷ் அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது. பிளாஸ்டிக் சிறுமணிகள் கொண்ட பற்பசையையும் சுத்தப்படுத்தும் பொருட்களையும் தடை செய்யும் சட்டத்தை அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா கடந்த ஆண்டு பிறப்பித்தார்.

*(நன்றி : டிசம்பர் 2016 ட்ரீம் 2047 இதழில் பிமன் பாசு எழுதிய கட்டுரை)*

பிளாஸ்டிக் சிறுமணிகள் உள்ள பற்பசை







## ஒன்ராறியோ சேமிப்புப் பிணையங்கள். ஒன்ராறியோவைக் கட்டியெழுப்பும் பிணையங்கள்.

உங்களுக்காகவும் — ஒன்ராறியோவுக்காகவும் ஓர் உறுதியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள். ஒன்ராறியோ சேமிப்புப் பிணையங்கள் மாகாணத்தால் உத்தரவாதம் அளிக்கப்படும் ஒரு பாதுகாப்பான, நெகிழ்வான முதலீடாகும். அவை ஒன்ராறியோவின் 150 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கான ஒரு உன்னதமான வழியாகும். நீங்கள் வங்கிச் சேவை பெறும் அல்லது முதலீடு செய்யும் இடத்தில் பெயர் குறிப்பிட்டு அவற்றைக் கேளுங்கள்.

யூன் 1 – 21 வரை கிடைக்கப் பெறும்.

**நிலையான வட்டி வீதப் பிணையம்**

பிணையத்தின் காலப் பகுதிக்காக அமைக்கப்பட்ட போட்டித் தன்மையான வட்டி வீதத்தை அனுபவியுங்கள்.

| | |
|---|---|
| 3 ஆண்டு நிலையான வட்டி வீதப் பிணையம் | 1.00% |
| 10 ஆண்டு நிலையான வட்டி வீதப் பிணையம் | 2.15% |

**மாறும் வட்டி வீதப் பிணையம்**

போட்டித் தன்மையாக இருக்க, 3 ஆண்டு காலத்துள் ஆண்டு தோறும் ஒரு புதிய வட்டி வீதம் வழங்கப்படுகிறது. நீங்கள் ஆண்டு தோறும் மீளப் பெறலாம்.

| | |
|---|---|
| தற்போதைய வட்டி வீதம் | 0.65% |

**உயரும் வட்டி வீதப் பிணையம்**

போட்டித் தன்மையான வட்டி வீதம் அதன் 5 ஆண்டு காலத்தினுள் ஒவ்வோராண்டும் தொடர்ச்சியாகக் கூடுகிறது. நீங்கள் ஒவ்வொரு ஆறு மாதத்துக்கும் ஒரு தடவை மீளப் பெறலாம்.

| | |
|---|---|
| 1 ஆம் ஆண்டு | 0.60% |
| 2 ஆம் ஆண்டு | 0.80% |
| 3 ஆம் ஆண்டு | 1.05% |
| 4 ஆம் ஆண்டு | 1.30% |
| 5 ஆம் ஆண்டு | 1.65% |

ontario.ca/savingsbonds • 1-888-212-BOND (2663) • TTY: 1-800-263-7776

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

ONTARIO 150 | Ontario Savings Bonds | Ontario

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## 'புற்றுநோய்' (Cancer) ஒரு புரியாத நோயா?'


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*




கடந்த இதழ் தொடர்ச்சி...

சமிபாட்டு நிலையில் சிலருக்குப் பிரச்சினைகள் உண்டு. தவறான உணவுகளை உண்ணுதல், தவறான நேரத்தில் உண்ணுதல், மனவிரக்தி போன்றவற்றினாலும் வாழ்நாள் முழுதும் சமிபாட்டுப் பிரச்சினை, எந்நேரமும் வயிற்றுப்பொருமல் உடையோரும் இருக்கிறார்கள். ஆனால் ஒருவருக்கு திடீரென சமிபாட்டின்மை தோன்றுவதோ அல்லது முன்பு இருந்தது இப்பொழுது அடிக்கடி தோன்றுவதோ அல்லது குறைந்த அளவு உணவு உண்ட பின்பு வயிறு நிறைந்தமாதிரியும் உணவை உண்டபின் அசாதாரண தன்மை தென்படுவதும் இரைப்பைப்புற்று நோயாகவும் இருக்கலாம். எதற்கும் வைத்தியர்களின் ஆய்வு முக்கியமாகும்.

நமது குரல் கரகரப்புத்தன்மை, குரல் அடைடத்தமாதிரி நிலை, பல காரணங்களினால் ஏற்படலாம். இந்நிலை பெரும்பாலும் 2 வாரங்களுக்கு மேல் படிவு காணப்படாவிடில் வைத்தியநிலையம் சென்று சோதித்துப் பார்ப்பது நன்மை பயக்கும்.

நீடித்த இருமல், ஈழை, கசநோய், சுவாசக் குழாய் நோய் போன்றவற்றிலும் ஏற்படலாம். அல்லது சுவாசப்பை அல்லது குரல்வளைப் புற்று நோயாலும் ஏற்படலாம் எனவும் கூறப்படுவதினால் அவதானம் முக்கியம். திடீரெனத் தோன்றும் மலபந்தம், மலச்சிக்கல், வயிற்றோட்டம் மாறி மாறித் தென்படுதல் இருப்பின் பெரும்பாலும் பெருங்குடல் புற்றாக இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. மற்றும் மலவாசலினால் இரத்தம் வடிதல், சிறு நீருடன் இரத்த நிறக்கலப்பு, வாந்தி எடுக்கும் போது இரத்தம் தென்படல் போன்ற நிலைகளில் சில வேளையில் புற்று நோயின் தாக்கம் எனவும் கூறப்படுகின்றது. எதற்கும் பரிசோதனை முக்கியமாகும்.

பெண்கள் மாதவிலக்கு வேளையில் அவதானமாகக் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளோரும் இருக்கின்றார்கள். அதாவது மாதவிடாய் வரும் திகதி ஒழுங்காக இருத்தல் வேண்டும். மற்றும் உடல் உறவின் பின் பெண் உறுப்பினால் இரத்தம் வெளி வருகின்றதா என்பதை அறிந்து அந்நிலை காணப்பட்டால் வைத்தியரை தாமதியாமல் அணுக வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. சில வேளை அந்நிலை காணப்படின் அது கருப்பை புற்று நிலையாகவும் அமையலாம் என வும் மீண்டும் கூறுகின்றார்கள்.

ஈரல் அழற்சி, பெரும்பாலும் செங்மாரியால் (மஞ்சள்காமாளை) நோயினால் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் 2 கிழமைக்குள் குணம் அடையாமல் இருந்தால் அதாவது நீடித்தால் ஈரல் சிதைவு ஏற்பட்டு இருக்கலாம். பித்தப்பை, பித்தக்குழாய் ஆகியவற்றில் கட்டி, கல்அடைப்பு காரணமாகவும் இருக்கலாம். கணையத்தில் (Pancreas) ஏற்பட்டு புற்று நோய் இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. எனவே சிந்திக்காமல் விரைவில் தங்கள் வைத்தியர்களிடம் சென்று பரீட்சிப்பது முக்கியமாகும்.




புகைத்தல், வெற்றிலை, புகையிலை பாவிப்பவர்களை நாம் நன்கு அறிவோம். இவர்களில் சிலர் வாய்ப்புற்றினால் பீடிக்கப்பட்டும் இருக்கின்றார்கள். இவர்களில் இலகுவில் புற்று நோய் தான் பற்றியுள்ளது என்பதை பரீட்சிக்கும் போது தெரியவரும். நமது சொத்தைப்பகுதியில் இருக்கும் உள் பற்கள் உடைந்து சேதமாக இருந்தால் அதன் மூலம் நாக்கு, சொத்தைப் பகுதிகள் பாதிக்கப்படும். அப்பேற்பட்ட பற்களை வெளியகற்ற வேண்டும்.

மேல் வாய்ப்பற்களை பிடுங்குவதற்கு சிலர் தயக்கமடைவார். இதனால் எவ்வகையான தீங்கும் ஏற்படாது. உரிய வைத்தியர்கள் அதன் நிலைமை எடுத்துக் கூறுவார்கள். புற்றுநோய் நாக்கையும் கன்னத்தின் உட்புறத்தில் (சொத்தை) உள்ள சதைப்பகுதியையும் சிலவேளை மேல்வாயையும் முரசு என்பவற்றை தாக்கும். எனவே இந்நிலை கண்டால் வைத்தியர்களை நாடவும். வாயில் ஏற்படும் புற்று ஆரம்பத்தில் வலி, வேதனை தென்படாது. ஆனால் கிருமித் தொற்றால் நரம்புகள் தாக்கி வலித்தன்மையை ஏற்படுத்தி வேதனையைக் கொடுக்கும். அத்துடன் நின்று விடாமல் காதைத் தாக்கி வலியும் ஏற்படலாம். சிலவேளை வைத்தியர்களுக்கு காதுவலி எனக் கூறும்போது காதைப் பரிசோதிப்பதுடன் வாய்பகுதியையும் பார்வையிடுவர். ஏதும் தழும்பு நிலை மற்றும் தாக்கம் இருந்தால் அவற்றின் நிலை கூறி பரீட்சித்து முடிவு எடுப்பர். அவர்கள் கூறியடி நடந்து கொள்ள வேண்டும்.

மேலும் இன்னும் சிலருக்கு வாய் அவசியம் அடிக்கடி ஏற்படுவது வாயின் மென்சவ்வுகள் வெண்மையான பாலாடை போன்று புண்கள் ஏற்படுவதும் உண்டு. எனவே வெற்றிலை, புகையிலை பாவிப்பதை தடுப்பது அல்லது குறைப்பது நன்று. நோய்த்தன்மை அதிகரித்து இருப்பின் யாவற்றையும் பாவிக்காது தவிர்க்க வேண்டும்.

இப்பேற்பட்ட நோயாளிகள் வைத்தியர்களிடம் செல்லும்போது பாதிக்கப்பட்ட பகுதிகளை நன்கு பார்த்து வேதனை நிலைகளை கேட்டு, மற்றும் பாதிப்பான பகுதியில் ஒரு சிறுபாகத்தை எடுத்துப் பரிசோதித்து உறுதியான முடிவை எடுத்து தங்களுக்கும் அது பற்றிக் கூறிக் கொள்வர்.

(தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...)




# யோகக்கலை ஓர் அறிமுகம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm


'யோகா' என்பது மிகவும் பழமை வாய்ந்தது. பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மாதான் இந்த யோகக்கலையை சூரியனுக்கு கற்றுக் கொடுத்ததாக ஒரு கதை உண்டு. சிவபெருமான் பார்வதிக்குக் இதை கற்றுக் கொடுத்ததாக புராணம் ஒன்று கூறுகிறது. பிரம்மதேவன்தான் இதை முதலில் கற்பித்ததாக சில நூல்கள் கூறுகின்றன. இதில் யார் முதல் என்பது நமக்கு தேவையில்லாத விடயம். இதன்மூலம் யோகக்கலை என்பது மிகவும் உயர்வான இடத்திலிருந்து உருவானது என்பதுதான் எமக்குத் தெரிய வேண்டும். இந்தக் கலையின் அடிப்படை 'சித்தம்' எனப்படும் நமது மனம். மனமானது நமக்குத் துணையானால் வாழ்க்கை சிறப்பாகவும் இனிமையாகவும் இருக்கும். அதுவே விரோதியானால் வாழ்வு கசப்பதுடன் பொலிவிழந்து காணப்படும்.

மேற்கண்ட தத்துவத்தின் அடிப்படையில் நமது மனதை அறிந்துகொள்ள, அறிந்தபின் அதை சீர் செய்ய, சீர் செய்த மனத்தை சரியான முறையில் பிரயோகம் செய்ய, அத்துடன் உடலை உறுதியாக வைத்திருக்க, எந்த நோய்களும் நெருங்காமல் பாதுகாக்க, தேகம் இளமைப் பொலிவுடன் விளங்க உருவான கலைதான் இந்த யோகா. மேலும் யோகா செய்யும்போது உடல், மனம், மூச்சு இந்த மூன்றும் இணைகின்றன. இதனால் ஆரோக்கியம் அதிகரித்து பிராணசுத்தி நம்மில் அதிகமாகிறது. இங்குதான் நாம் யோகாவிற்கும் ஏனைய உடற்பயிற்சிக்கும் உள்ள (Gym) வேறுபாட்டினைக் காண வேண்டும்.

உடற்பயிற்சியின் போது செய்கின்ற உடல் அசைவுகள் வேகமாகச் செயல்படுகின்றன. இதன்போது தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டோ அல்லது சுற்றுப்புறத்திலுள்ள நிகழ்வுகளை அவதானித்துக் கொண்டோ இந்த பயிற்சியை ஒருவரால் செய்ய முடியும். இப்பயிற்சி முடிந்தவுடன் அதிகமான வியர்வையும், சோர்வும் உண்டாகும்.

ஆனால் யோகாவில் பயிற்சிகளைச் செய்யும்போது மூச்சு உள்ளே இழுப்பதற்கும் அதை வெளிவிடுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. உதாரணமாக கைகளை தலைக்கு மேலே தூக்கும்போது மூச்சு உள்ளே இழுக்கப்படுகிறது. பின் கைகள் கீழே இறங்கும்போது மூச்சு வெளிவிடப்படுகின்றது. இவ்வாறு செய்வதால் அசைவுகள் மெதுவாக நகர்வதால் மூச்சானது ஆழமாக இருக்கிறது. மனமும் இதனோடு இணைகிறது. அமைதியும் அடைகிறது. அதிக வியர்வை, களைப்பு ஏற்படுவதில்லை. உடல், மனம் இரண்டும் புத்துணர்ச்சி பெறுகிறது. உடலில் பிராண சக்தி அதிகமாகி நோய் எதிர்ப்பு சக்தி கூடுகிறது.

யோகா என்பது ஆசனங்கள் மட்டுமல்ல. தியானம், பிராணாயாமம் என்பனவும் சேர்த்து செய்யும்போது தான் முழுமையான பலனை அடையமுடியும். இவ்வுலகில் நீண்ட ஆயுளுடனும், நிறைவான ஆரோக்கியத்துடனும், இளமைப்பொலிவுடனும், தெளிந்த மனத்துடனும் வாழ யோகா வழிகாட்டுகின்றது. இதனைப் பழகுவதற்கு வயது வரம்பு எதுவுமில்லை. சிறியவர் முதல் முதியவர் வரை ஆண், பெண் இருபாலாரும் எளிதில் பழக முடியும். இதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. ஆரம்பத்தில் ஒரு யோகா ஆசிரியரின் உதவியை பெறுவது சிறந்தது.

### யோகா செய்வதால் கிடைப்பது என்ன?

1. ஆயுளை அதிகரிக்கச் செய்கின்றது.
2. ஞாபக சக்தியை அதிகரிக்கின்றது.
3. மனதை நல்வழியில் செலுத்துகிறது.
4. ஆண்மையை அதிகரிக்கச் செய்கிறது.
5. நோயற்ற வாழ்விற்கு வழிகாட்டுகிறது.
6. உடலை அழகாக வனப்புறச் செய்கிறது.
7. பிணிகள் யாவற்றையும் குணப்படுத்துகிறது.
8. சோர்வையும் சோம்பலையும் ஒழிக்கிறது.
9. மனதிற்கு அமைதியைக் கொடுக்கிறது.
10. என்றும் இளமையுடன் வாழ வழி செய்கிறது.
11. உடல் உறுப்புக்களை வலியப்படுத்துகிறது.
12. உடலின் ஊளைச் சதையை கரைக்கிறது.
13. இதயம், சுவாச உறுப்புக்களை உறுதி யாக்கின்றது.

## சர்வதேச யோகா தினம் - யூன் 21

14. உடலுக்கு மிகுந்த பலத்தைக் கொடுக்கிறது.
15. உடலின் இரத்த ஓட்டத்தை ஒழுங்கு செய்கிறது.
16. எப்போதும் சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது.




17. கோபக்குணத்தை மாற்றி சாந்தப்படுத்துகிறது.
18. தீராத கவலையை மறக்க உதவுகின்றது.
19. புத்தியை கூர்மையாக்கி எதிலும் வெற்றி பெற வைக்கின்றது.
20. நல்ல சிந்தனையுடன் படிப்பில் முன்னேற்றமடையச் செய்கிறது.
21. களைக்காது வேலை செய்யும் சக்திக் கொடுக்கிறது.
22. உடலின் தேய்மானத்தைத் தடுக்கிறது.
23. நரம்பு மண்டலங்களை உறுதியாக்கு கின்றது.
24. உடல், உள்ளம், உயிர் மூன்றும் ஒன்றாக இணைந்து செயல்பட உதவுகிறது.
25. காரிய சித்தி கைகூடி நினைத்ததை அடையும் பாக்கியத்தை அளிக்கிறது.

இந்த யோகாக்கலையானது இன்று இனம், மதம், மொழி என்பனவற்றைக் கடந்து உலகம் எங்கிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பயிற்சிக்கூடங்கள் பெருமளவில் உருவாக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. உயிருக்கும் உடலுக்கும் உறுதுணையாயிருக்கும் யோகாவின் முக்கியத்துவம் கருதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் முயற்சியால் ஐக்கிய நாடுகள் சபையானது (United Nation) யூன் மாதம் 21 ஆம் திகதியை உலக யோகா தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழியின் கருத்தின்படி ஆரோக்கிய செல்வத்தை அடைய அனைவருக்கும் யோகா பழகுவது அன்றாடக் கடமையில் ஒன்றாக எண்ணி பழகிவர எந்த நோயும் நம்மை அணுகாது வாழ முடியும்.

# புற்றுநோய்...

14 ஆம் பக்கத்தொடர்ச்சி

சிலவேளையில் ஆரம்பநிலையில் கண்டு கொள்ள முடியா விடில் சில மாதம் கழித்து மீண்டும் அப்பரி சோதனையைச் செய்து



கொள்வர். எனவே எதற்கும் நாம் தாமதமாகாமல் இருத்தல் வேண்டும்.

வாய்ப்புற்று இருந்தாலும் ரேடியோ கதிர் வீச்சால் குணப்படுத்தலாம் எனவும் கூறப்படும் போது தாமதித்தால் புற்றுநோய் பரவி வலியும் ஏற்பட்டு உறக்கம் இன்றி தவிர்ப்பதுடன் மரணத்தையும் ஏற்படுத்தலாம். எனவே எதற்கும் தாமதம் தவிர்க்கப்படல் வேண்டும்.

தற்கால விஞ்ஞான ஆய்வில் இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் சுகம் பெற்று தகுந்த உடல் நிலையோடு வாழ்ந்து வருபவர்களை நாம் காணமுடியும். இதனால் மன நிம்மதி கிடைக்கும். 'அச்சமில்லை' அச்சமில்லை பயப்பட வேண்டியதில்லை.


# ஸ்ரீ அபிராமி திருமணமாலை



**முன் கட்டணம் இல்லை**

கனடா, லண்டன், பிரான்ஸ், ஸ்வீஸ், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள Doctors, Engineers, B.A, B.Sc., M.Sc. பட்டதாரிகள் சாதாரண படிப்பாளர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் போன்ற ஆண் பெண் இரு பாலாரினுடைய Photos, Biodatas, ஜாதகங்கள் ஆகியன எம்மிடம் உள்ளன.

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ளும் எங்கள் நேர்மையான சேவையை பெற்றுக்கொள்ள உங்கள் பிள்ளைகளின் Photo, Biodata, ஜாதகம் ஆகியவற்றுடன் எமது அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

இலங்கையில் கலவரத்தால் கணவனை இழந்த ஒரு பெண்ணை கனடாவைச் சேர்ந்த ஒருவர் திருமணம் செய்ய விரும்பினால் எமது சேவையை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்

Contact:
S.Ram Lingam
2 Dallyn Crescent
Scarborough M1K 4V9

Canada: 647.389.4130
: 647.638.5304
India : 01191.876.051.7774

## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

### (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



4. பேரிணை காலம். (தொடர்ச்சி)

சென்ற தடவையின் கடைசிப் பந்தியினைத் தந்து இன்று தொடர்வது வசதியாக இருக்கும் என்பதனால் அதில் இருந்து இன்று தொடங்குகின்றேன்.

சக்தியும் சடங்களும் ஒன்றுதான் என்பது எங்களுக்குத் தெரியும். வெற்றிடத்தில் சடங்கள் (துணிக்கைகள்) தோன்ற வேண்டுமாயின் சக்தி வேண்டும். ஒன்றுமே இல்லாத வெற்றிடத்தில் இந்தச் சக்தியிற்குத் துணிக்கைகள் எங்கு போக முடியும்? இங்கு சிக்கல் சுலபமாகத் தீர்க்கப்படுகின்றது. வெற்றிடத்தில் இருந்து சக்தியைக் கடனாக வாங்கி, துணிக்கைகள் தோன்றுகின்றன. இங்குதான் இயற்கையின் அடுத்த அழகு அல்லது இயற்பியலின் சுவை தெரிகிறது.

இப்படிக் கடனாக வாங்கப்படும் சக்தியை, வெற்றிடத்தின் 'மாயசக்தி' என்கிறார்கள். இங்கும் அயன்ஸ்ரைனின் $E = mC^2$ என்பதற்கு ஏற்பவே சடங்கள் தோன்றுகின்றன. இவ்விதம் சடங்கள் தோன்றுகையில் தனியனாக ஒன்று மட்டும் தோன்றாது. ஒரு சோடியாகத்தான் தோன்றும். இப்படிச் சோடியாகத் தோன்றுகையில், ஒன்று துணிக்கை என்றால் மற்றது முரண் துணிக்கையாக இருக்கும். இச்சடங்களும் எங்களது சாதாரண சடங்கள் போன்றவையே. அவற்றிக்குத் திணிவும் இருக்கும், அத்துடன் அவை அந்த வெற்றிடத்துள் ஓடித் திரிந்து கொண்டும் இருப்பினம்.

இங்கு அடுத்த சிக்கல் என்னவென்றால், வெற்றிடத்திடம் இருந்து கடன் வாங்கிய சக்தி அல்லவா. உடனேயே வெற்றிடத்துக்குத் திரும்பக் கொடுத்து விடவேண்டும். அதனால், கிட்டத்தட்ட தோன்றிய உடனேயே துணிக்கையும், அதன் முரண் துணிக்கையும் ஒன்றை ஒன்று தேடிப் பிடித்து, இரண்டும் ஒன்றிணையும். ஏன் இவ்விதம் ஒன்றிணைகின்றன என்றால், அவை ஒன்னிணைகையில், இரண்டு அழிந்து இல்லாமற் போய்விடும். அங்கு பொருளழிவு ஏற்படுவதால் சடம் இல்லாது போய்விடுகிறது. சடம் இல்லாது போவதால், அங்கு சக்தி மீண்டும் தோன்றும். இவ்விதம் தோன்றிய சக்தி வெற்றிடத்திற்குத் திரும்பவும் கொடுக்கப்படும். அதானல் மாய சக்தி அங்கே தீர்க்கப்பட்டுவிடும். இப்படியான இயல்புடைய வெற்றிடத்தைத்தான் குவாண்ரம் வெற்றிடம் என்கிறார்கள்.

ஒன்றுமே இல்லாத வெற்றிடம் துணிக்கைகளுக்கான சக்தியைத் தன்னில் இருந்து குவாண்ரம் வெளிக்கு கடனாக, ஒரு நிபந்தனையுடன் எடுத்துக் கொடுக்கின்றது. நிபந்தனை என்னவென்றால், அந்த சக்தியை கொஞ்ச நேரத்தில், கிட்டத்தட்ட உடனேயே என்பது போல் திருப்பித் தர வேண்டும். இப்படிக் கொஞ்ச சக்தியைக் கொடுத்து தன்னை அது 'மறைசக்தி" கொண்ட இடமாக (தற்காலிகமாக) ஆக்கிக் கொள்கின்றது. இப்படியாக வெற்றிடத்தில் பெறப்பட சக்தி



யானது தனக்கு ஒப்ப சோடித் துணிக்கைகளைத் தோற்றுவிக்கும். இயற்பியல் இயல்பின் படியே, அவை துணிக்கை – முரண் துணிக்கை என இருக்கும். இத்துணிக்கைகளுக்கான சக்தி மிகக் குறுகிய காலத்தில் திருப்பிக் கொக்கப்பட வேண்டும் அல்லவா. அதனால் அத்துணிக்கைகள் அவ்வெற்றிடத்தில் படுவேகமாக ஓடித்திரிந்து, தமது காலம் முடிகையில் தமது சோடியைக் கண்டுபிடித்து, அதனுடன் சேர, மீண்டும் அவ்விடத்தில் சக்தி தோன்றும். இச்சக்தி மீண்டும் வெற்றிடத்திற்கு வழங்கப்பட, கடன் தீர்ந்துவிடும்.

இப்படியாகக் குவாண்ரம் வெற்றிடத்தில் துணிக்கைகள் தோன்றுவதும் மறைவதுமான நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். இப்படியாக சக்தியைப் பெறுவதும், கொடுப்பதும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருப்பதால், வெற்றிடம் என்பது உண்மையில் வெற்றிடம் அல்ல. எப்பொழுதும் துணிக்கைகளைக் கொண்டதாகவே இருக்கும். அதுவும் ஒன்றிரண்டு துணிக்கைகள் என்றல்ல. எண்ணிக்கையில்லாத் துணிக்கைகள் இருக்கும். ஆனால் அவையெல்லாம் தோன்றுவதும் உடனேயே மறைவதுமாக இருக்கும். அதனால் இத்துணிக்கைகள் எங்களின் புலன்களுக்குள் அகப்பட்டுக் கொள்ளமாட்டா. எனவே அவற்றை மாயத் துணிக்கைகள் என்கிறோம். எனவே, வெற்றிடம் என்பதனை மாயத் துணிக்கைகளின் கடல் எனலாம்.

அது சரி, மறைசக்தி, மாயத் துணிக்கைகள், வெற்றிடம் என்பது மாயத் துணிக்கைகளின் கடல் என்றெல்லாம் எப்படி நம்புவது என்று கேக்கின்றீர்களா? இதுதான் விஞ்ஞான அதிசயம். சாதாரண மக்களால் நம்ப முடியாதது போல் இருந்தாலும், விஞ்ஞானம் இதனை சரியானது என்று நிரூபித்துள்ளது. மாயத் துணிக்கைகள் என்பதனைக் கைசன்பேர்க்கின் உறுதியின்மைக் கொள்கைசரியானது என்றே காட்டுகிறது. இதனால்தான் இந்தக் குவாண்ரம் வெற்றிடக் கொள்கையில் விஞ்ஞானிகள் அதிகளவு நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றார்கள். வெற்றிடத்திடம் கடன் வாங்கிய சக்தி என்பதால்தானே உடனேயே திரும்பக் கொடுப்பதற்காக, மாயத் துணிக்கைகள் தங்களை அழித்துக் கொள்கின்றன. இங்கு விஞ்ஞானிகளுக்கு ஒரு சவால் வந்தது, எவ்விதம் குவாண்ரம் கடலினை உண்மை எனக் காட்டுவது? வெற்றிடத்தில் ஏராளமான மாயத் துணிக்கைகள் உண்டு எனக் காட்டுவது?

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அந்நேரத்தில் அவர்களுக்கு ஒரு உத்தி தோன்றியது. மிகவும் எளிமையான சிந்தனை. இந்த மாயத் துணிக்கைகள் வெற்றிடத்தில் இருந்து பெற்ற சக்தியை ஏதோ ஒரு வழியில் வெற்றிடத்திற்கு நாங்கள் கொடுத்து விட்டால் இந்த மாயத் துணிக்கைகளை மறைந்து போகாமற் செய்து உண்மைத் துணிக்கைகள் ஆக்க முடியுமல்லவா! உங்களுக்கு எழுந்திருக்கக் கூடிய இந்தச் சிந்தனை விஞ்ஞானிகளுக்கும் எழுந்தது. செய்தும் பார்த்தார்கள், வெற்றியும் கண்டார்கள். ஆம், அக்கடின முயற்சியின் முடிவில், வெற்றிடத்தின் மாயத் துணிக்கைகளை உண்மைத் துணிக்கைகளாக்கி, அவற்றினை இனம்கண்டு கொண்டு தங்களின் கற்பனையில் தாம் கண்ட மாயத் துணிக்கைகளுக்கான சிந்தனைப் பரிசோதனையை உண்மையாக்கினார்கள். இதிலிருந்து, மாயத் துணிக்கைகள் என்பதும் குவாண்ரம் கடல் என்பதும் உண்மையாக்கப்பட்டது. அத்துடன், அந்த முறையில் தான் பல உப அணுத் துகள்களும் இனம் காணப்பட்டன.

இப்படியாகத்தான் குவாண்ரம் வெற்றிடம் காணப்படுகின்றது. இப்படியான குவாண்ரம் வெற்றிடம்தான் எல்லாவற்றிக்கும் மூலம் என்பது இரண்டாவது கருதுகோளாக உள்ளது. இவ்விபரங்களைத் தெரிந்து கொண்ட நாம் அடுத்த தடவையில் பேரிணை காலத்தின் மீதியைப் பார்ப்போம்.

அடுத்த தடவையில் அந்த அழகினைப் பார்ப்போம்.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

## நாமும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அதே மாதிரியான நிலைமையாகவே இதனையும் கொள்ள முடியுமா? அடமானக் கடன் பெறுவதில் ஏற்படுத்திய நெருக்கடியும், விலை குறைவதற்குக் காரணமாகலாம்? அத்துடன் மேலதிகமான ஆதனங்கள் விற்பனைக்காக சந்தையில் இருப்பதும் காரணமாகலாம்? ஆதன வியாபாரம் எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கலாம் என்பதனை அடுத்துவரும் சில மாதங்களில் தெரியவரலாம்?

# "ஜோதிகா வாழ்க்கையில் மறக்க முடியாத நாள்!"

## இயக்குநர் பிரம்மா நேர்காணல்

### சந்திப்பு: சிவதாணு

"வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விதமான பிரச்சினைகளை, சவால்களை பெண்கள் எதிர்கொள்கிறார்கள். வேலை பார்க்கிற இடங்களில் மட்டுமில்லாமல் எல்லா இடங்களிலும் அவர்களுக்கு சவால்கள் இருக்கிறன. இந்தச் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் மற்றொரு பரிணாமத்தை, அதை குறித்த விவாதத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் படமாக மகளீர் மட்டும் இருக்கும். அந்த வகையில் தமிழ்ச் சூழலில் ஒரு சின்ன விதையை விதைக்கும் என்று உறுதியாகச் சொல்லலாம். அதேநேரம், ஆணோ பெண்ணோ சக மனிதர்களிடம் காட்டவேண்டிய நேசிப்பையும் மரியாதையையும் பற்றி பேசக்கூடிய படமாகவும் இது இருக்கும்." கவனத்துடன் நிறுத்தி நிதானமாக பேசுகிறார் இயக்குநர் பிரம்மா.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நடிக்க வந்து '36 வயதினிலே' படம் மூலம் ரசிகர்களின் நெஞ்சம் நிறைந்திருக்கும் ஜோதிகா, சொந்தக் குரலில் பேசி நடிக்கும் படம், இவருடன் சேர்ந்து சின்னச் சின்னப் பாவனைகளிலும் கதாபாத்திரங்களுக்கு அழுத்தம் சேர்க்கும் நடிகைகள் ஊர்வசி, பானுப்ரியா, சரண்யா மூவரும் சேர்ந்து நடித்திருக்கும் படம், தன் முதல் படமான 'குற்றம் கடிதல்' திரைப்படத்திலேயே பாராட்டுகளையும் விருதுகளையும் குவித்த இயக்குநர் பிரம்மா இயக்கும் படம் என்று நிறைய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது 'மகளிர் மட்டும்'.

இந்நிலையில் இயக்குநர் பிரம்மாவை சென்னையில் சந்தித்தோம்.

'குற்றம் கடிதல்' படத்தில் அதிகம் அறிமுகம் இல்லாத நடிகர்கள் யதார்த்த முகங்களாக இருந்தார்கள். ஆனால், இதில் ஜோதிகா உட்பட எல்லோருமே பிரபலங்கள். தமிழ் திரைத்துறையின் வணிக சூழலுக்கு நீங்களும் தயாராகிறீர்களா அல்லது கதைக்காக இவர்களை தேர்வு செய்தீர்களா?



நான் வீதி நாடகங்கள் பண்ணிக்கொண்டு இருந்தவன். அப்போதிருந்தே, நான் சொல்லவரும் விடயத்தை நிறையப் பேருக்குக் கொண்டுபோய் சேர்க்க வேண்டிய விருப்பம் இருக்கிறது. கொண்டு போய் சேர்க்க ஒரு பெரிய வாகனம் தேவைப்படுகிறது. மகிழ்ச்சியாகப் படம் பார்க்க நினைக்கிறவர்களுக்கு திரைப்படம் என்பது முழுக்க பொழுதுபோக்காக மட்டும் தான் இருக்கிறது.

அதேநேரம் அந்தப் பொழுதுபோக்கிற்குள் ஒரு விடயத்தைச் சொன்னால் அதை எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால், வெறுமனே கருத்தை மட்டும் சொல்வதாக இருந்தால், "எனக்கு கருத்து சொல்ல நீ யார்?" என்ற கேள்வி வரும். அதேநேரம், ஒரு பிரபலம் மூலமாக அந்தச் செய்தியை சொல்லும் போது அதற்கு ஒரு மதிப்பு இருக்கிறது. எனவேதான் பிரபலங்கள்.

திரைப்படம் என்பது ஜனநாயக கலை என்றாலும்கூட இதுவும் சந்தைதான். இங்கே முதலீடு இருக்கிறது. அதை நம்பிப் பல பேர் இருக்கிறார்கள். அதனால், நீங்கள் சொல்வது போலச் சந்தை மதிப்புக்காகவும் பிரபல முகங்கள் எனக்கு தேவைப்பட்டார்கள்.

ஜோதிகா, ஊர்வசி, பானுப்ரியா, சரண்யா கதாபாத்திரங்கள் பற்றி?

பிரபாவதி என்ற ஆவணப்பட இயக்குநராக ஜோதிகா நடிச்சிருக்கிறார்கள். தன்னுடைய வாழ்க்கையை, முன்னேற்றத்தை தானே நிர்மானித்துக்கொள்ளும் ஒரு பாத்திரம். இதுபோல் சுப்பு, கோமாதா, ராணி என்ற மகிழ்ச்சியான யதார்த்த பெண்களாக ஊர்வசி, பானுப்ரியா, சரண்யா மூவரும் நடித்திருக்கிறார்கள். மகிழ்ச்சியான கதாபாத்திரங்கள் என்பதற்காக இது நகைச் சுவைப்படமென்று எடுத்துக் கொள்ளக் கூடாது. மெல்லிய புன்னகையுடன் பார்க்கக் கூடிய, 'ஃபீல் குட்' படமாக இருக்கும்.

ஜோதிகாவின் நடிப்பு எப்படி?

நிறைய அர்ப்பணிப்பு செய்திருக்கிறார்கள். மனதில் உறுதியும் தோற்றத்தில் இளமையும் கொண்ட பெண் பாத்திரத்துக்காக கடுமையான உடற்பயிற்சி, புல்லட் வாகனம் ஓட்டக் கற்றுக்கொண்டது என்று அசுரத்தனமாக உழைத்திருக்கிறார். முக்கியமாக, ஜோதிகாவின் வழக்கமான நடிப்பில் இருந்து வேறவிதமான நடிப்புத் தேவைப் பட்டது. அதற்காக, பிரபாவதி பாத்திரத்துக்குள் ஒன்றிப்போவதற்காக, படப்பிடிப்புக்கு செல்வதற்கு முன்பே சில விடயங்களை அவரிடம் சொல்லித் தயார் படுத்தினேன். அதை அப்படியே உள் வாங்கி நடிப்பில் அவர் பிரதிபலித்தபோது இயக்குநராக நானே பிரமித்துப் போனேன்.

அதுபோல், இதில் சொந்தக் குரலிலேயே பேசியிருக்கிறார். இதற்கு முன்பு 'மாயா' படத்துக்காக பேசியிருக்கிறார். ஆனால், அதில் நடிகை ஜோதிகாவாகவே வருவார். மற்றபடி, கதையின் கதாபாத்திரமாக சொந்தக் குரலில் பேசியிருப்பது இதுவே முதல் படம். விடியற் காலை 4 மணிக்கு படப்பிடிப்பு என்றால் ஜோதிகா அதற்கு முன்னதாகவே சம்பந்தப்பட்ட இடத்துக்கு வந்து அசத்துவார். அவ்வளவு ஈடுபாடு.

எளிய மனிதர்களை, புதுமுகங்களை வைத்து 'குற்றக் கடிதல்' படத்தை தந்த உங்களுக்கு, பிரபலங்களை வைத்துப் படம் இயக்கும்போது தயக்கங்கள் இருந்ததா?

'குற்றம் கடிதல்' படத்தில் நடித்தவர்களில் ஒருவரைகூட பார்வையாளர்களுக்கு தெரியாது. முழுக்க முழுக்க அவர்கள் பாத்திரங்களாக மட்டுமே பார்க்கப் பட்டார்கள். ஆசிரியையாக வருபவர் ஆசிரியையாகத்தான் தெரிவார். அவர்கள் அதற்காகவே பிறந்து அதற்காகவே வாழ்ந்த மாதிரிதான் இருக்கும். இது நடிகை என்ற நினைவு வராது. புது முகங்கள் நடிப்பதில் இருக்கும் பலன் அது. அதற்கு நேரெதிராக பிரபலங்கள் நடிக்கும்போது அவர்கள்தான் தெரிவார்கள். எந்தப் பாத்திரமாக இருந்தாலும் ஜோதிகா தான் தெரிவார். இந்நிலையில், அதனைக் கடந்து பாத்திரமாக பார்வையாளர்களுக்கு தெரிய, பிரபாவதியாக மாற அவர்கள் நிறைய உழைக்கவேண்டும். பார்வையாளர் களிடம் ஜோதிகாவை மறக்கடித்து காட்ட வேண்டும் என்ற சவால் ஒரு இயக்குநராக எனக்கும் இருக்கிறது.

ஜோதிகாவுக்கு மட்டுமல்ல ஊர்வசி, பானுப்ரியா, சரண்யா எல்லோருக்குமே தனித்தனி பிம்பம் இருக்கிறது. அதையெல்லாம் உடைத்து அந்தந்த பாத்திரங்களில் அவர்களைப் பொருத்த வேண்டிய சவாலான வேலை. சரண்யா நிறைய அம்மா பாத்திரங்கள் செய்திருக் கிறார். அவற்றை ஞாபகப்படுத்தாததாகவும் இருக்க வேண்டும்.

மேலும், புதுமுகங்கள் என்கிறபோது நமக்கு எது தேவையோ அதை அவர்களிடம் அழுத்திச் சொல்லமுடியும். ஆனால், இவர்களிடம் அப்படி சொல்கிற தற்கு தயக்கம் இருந்தது. ஜோதிகா, ஊர்வசி, பானுப்ரியா, சரண்யா எல்லோருக் குமே நான் பெரிய ரசிகன். படங்களில் அவர்களுடைய நடிப்பைப் பார்த்தே வியந்தவனுக்கு அவர்களை இயக்கும் போது தயக்கம் இருக்கத்தான் செய்யும். ஆனால், எல்லோருமே எளிமையாகப் பழகி என்னுடைய அந்த தயக்கத்தை உடைத்தார்கள்.

படப்பிடிப்பு நாட்கள் எப்படியிருந்தது?

மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். பானுப்ரியா மாதிரியே நடித்து அவரைக் கலாய்ப்பார் ஊர்வசி. பானுப்ரியா குழந்தை மாதிரி. ஊர்வசி செய்யும் சேட்டைகளை

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

**வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்**

**காலம்:** ஜுன் 17 ஆம் திகதி 2017
**நேரம்:** சனிக்கிழமை காலை 9:00 மணி முதல்
**இடம் :** ***Kid's Town L'Amoreaux Park, 3159 Birchmount Road, Birchmount & McNicoll, Scarborough, ON***

கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், முன்னாள் அதிபர்கள், அபிமானிகள், அவர்களின் வாரிசுகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
திரு. N. மகேந்திரன் - **416.616.4386**
திரு. R. மகேந்திரன் (மாஸ்ரர்) - **905.294.9670**
திரு. V. இராஜகுலேந்திரன் - **416.305.7173**

# வட மாகாண...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

*உள்ளார் என்று அறிகின்றோம். திணைக்கள அதிகாரிகள் மிரட்டப்பட்டு சில நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர் முன்னெடுத்த தன்னை முதன்மைப் படுத்திய செயற்திட்டங்களால் மாகாண சபை நிதி வீண்விரயம் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், அவரது செயலாளருமான பற்றிக் டிறைஞ்சன் ஆகியோர் பதவி விலக வேண்டும்.*

*வடக்கு மாகாண சபையை வினைத்திறனாகக் கொண்டு நடத்துவதற்கு எமது பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்'*

- இரு அமைச்சர்கள் மீது கூறப்பட்டுள்ள குற்றசாட்டுக்கள் இவைதான்.

இப்போது, குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர்கள் இருவரும் பதவி விலக வேண்டும் என சில தரப்புக்களிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. இது தொடர்பாக மக்களுக்கு முழுமையான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று சிலர் கோருகின்றனர். குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு அவை உண்மை எனக் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களும் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்ற பரிந்துரை விசாரணைக் குழுவினால் முன்வைக்கப்பட்டவுடனேயே இந்த அமைச்சர்கள் இருவரும் பதவி விலகியிருக்க வேண்டும் என்றும் சிலர் கருத்து வெளியிடுகின்றனர். கல்வி அமைச்சர் குருகுலராஜா பதவி விலகவுள்ளார் - விலகி விட்டார் என்றெல்லாம் ஊடகங்களில் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. இப்பத்தி எழுதிக்கொண்டிருக்கையில், குருகுலராஜா தான் சார்ந்த தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் தனது பதவி விலகல்




கடிதத்தை சமர்ப்பித்துள்ளார் எனவும், மாவை சேனாதிராஜா அதனை ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இது ஒரு தற்காலிக பதவி விலகல் எனவும் அச்செய்திகள் குறிப்பிட்டன. முதலமைச்சரிடம் கையளிக்க வேண்டிய கடிதத்தை ஏன் அவர் கட்சித் தலைவரிடம் கையளித்தார் என்ற கேள்விகளும் கூட எழுந்தன.

இன்று, தமிழ் மக்கள் மத்தியிலுள்ள நடுநிலையாளர்கள் கருத்து வெளியிடுகின்ற போது, வட மாகாண சபைக்குப் பொறுப்பாகவுள்ள முதலமைச்சர் மக்களுக்குத் தெளிவான விளக்கத்தை வழங்க வேண்டும் என்றும், அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் உண்மை யானால் அவர்களை முதலமைச்சர் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும், வட மகாணசபை வடக்கு மக்களுக்கான சேவையினை வழங்கும் நிர்வாக மையமாக முழுமையாக மாற்றம் பெறவேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

# “ஜோதிகா...

14 ஆம் பக்கத்தொடர்ச்சி

பார்த்து சிரிப்பார். ஜான்சி ராணி பிறந்த ஊரான ஜான்சியில் கடைசி நாள் படப்பிடிப்பு முடித்துவிட்டு, ஊருக்கு திரும்ப ரயில் பயணச் சீட்டு முன்பதிவு செய்திருந்தோம். காத்திருப்பு பட்டியலில் இருந்தது. ஆனால், அன்றைக்கு மாலை ஆகியும் பயணச் சீட்டு உறுதிச் செய்யப் படவில்லை. அன்றைக்குத்தான் ஜோதிகாவுக்குப் பிறந்த நாள். மிகவும் பதற்றம் ஆகிவிட்டோம். எப்படியோ மாற்று ஏற்பாடு செய்து இரவு ரயில்வே நிலையம் வந்து சேர்ந்தால், எந்த நடைமேடையில் ரயில் வரும் என்பது தெரியவில்லை. அங்கே இங்கே ஓடி ஒரு வழியாக ரயிலில் ஏறி உட்கார்ந்தோம். இந்த களேபரத்தில் நாங்கள் வாங்கி வந்திருந்த பிறந்த நாள் கேக் உருகிப்போய்விட்டது. சூர்யாவும் எங்களுடன் ரயிலேயே வந்தார். ஓடும் ரயிலில் சின்ன மெழுவர்த்தி வெளிச்சத்தில் கேக் வெட்டி ஜோதிகாவின் பிறந்த நாளை



கொண்டாடினோம். அலுப்பும் களைப்பும் கலைந்து மகிழ்ச்சி களைகட்டியது. ஜோதிகாவின் வாழ்க்கையில் அது மறக்க முடியாத பிறந்த நாளாக இருக்கும்.

நடிகர் சூர்யாதானே தயாரிப்பாளர். என்ன சொன்னார்?

அவரிடம் கதையை சொன்னபோது, ‘அருமையான திரைப்படமாக கொடுங்கள்’ என்று ஒரு வார்த்தை மட்டும்தான் சொன்னார். அதன்பிறகு, எதிலும் அவர் தலையிடவில்லை. அவ்வளவு சுதந்திரம் கொடுத்தார். படத்திற்காக இந்த நிமிடம் வரையிலும் நடந்த வேலைகளில் அவருக்கு மிகவும் திருப்தி.

கடைசியாக...?

என்னுடைய எல்லாக் குறும்படங்களுக்கும் ‘குற்றம் கடிதல்’ படத்துக்கும் ஒளிப்பதிவு செய்த நண்பன் மணிகண்டன்தான் இதற்கும் ஒளிப்பதிவாளர். ஜோதிகாவுக்கு மணிகண்டனுடைய ஒளிப்பதிவு மிகவும் பிடித்துப்போய்விட்டது. வியந்து பாராட்டினார். ஒளிப்பதிவு என்று இல்லாமல் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்திருக்கும் மணிகண்டன் எனக்கு பலம்.



# ஒருவர்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

மேலே குறிப்பிடப்பட்ட முதல் இரு சந்தர்ப்பங்களில் சாரதி அனுமதிப் பத்திரம் ரத்தாகும் போது அது நேரடியாகவே நிலைமை சாரதிக்குத் தெரிவதால் எதுவிதமான சிக்கல்களும் இருக்கமாட்டாது. ஆனால் மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்ட விடயம் கடிதமாக அமைச்சினால் அனுப்பி சாரதி அனுமதிப் பத் திரம் ரத்துச் செய்யப்படுவது சாரதிக்குத் தெரியாமல் போகலாம். இதை அறிய முடியாததால் இது மக்கள் புகாராக 2017 ஆம் ஆண்டில் எழுந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஒன்ராரியோ போக்குவரத்து அமைச்சு 130,000 பேர்வரையில் கடிதம் அனுப்பி அவர்களின் சாரதி அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்வதாக அவர்களின் புள்ளிவிபர அறிக்கை தெரிவிக்கின்றது.

இவ்வாறு ரத்துச் செய்யப்படுவதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

- வீதி ஒழுங்கு குற்றசாட்டுகளில் தண்டனை பணம் செலுத்தத் தவறியது.
- வாகனம் செலுத்த முடியாத அளவுக்கு உடல்நிலை நோய்களினால் பாதிக்கப்பட்டுள் ளது.
- நீதிமன்ற உத்தரவின்படி குடும்பத்தினர், பிள்ளைகளுக்கு செலுத்தும் தாபரிப்பு பணம் செலுத்த தவறியது.
- வாகனசெலுத்தும் குற்றச்சாட்டுகளில் புள்ளிமதிப்பீட்டு இழப்புகள் என்பது சட்ட வரையறையினை கடந்து விட்டது.
- பூரணமான G சாரதி பத்திரம் (Graduated license) பெறத் தவறியது அல்லது மீண்டும் வீதிப் பரீட்சைக்கு தோற்றி G(2) அனுமதிப்பத்திரம் புதுப்பிக்க தவறியது.

இப்படியாக சில காரணங்களுக்காக மாகாணப் போக்குவரத்து அமைச்சு அதிகார பூர்வமாக கடிதத்தில் அறிவித்துவிட்டு, அவரவரின் சாரதி அனுமதிப்பத்திரத்தினை ரத்து செய்திருப்பார்கள்.

அனேகமாக வாகனம் செலுத்த முடியாத அளவுக்கு ஒருவரின் உடல் நிலை பாதிப்படைந்து மருத்துவர்கள், வைத்தியசாலைகள் போக்குவரத்து அமைச்சுக்கு அறிக்கை அனுப்பியிருந்தால் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ரத்தாகியிருக்கும்.

முகவரி மாறுவதாலும் கடிதங்கள் தவறியிருக்கலாம். வீட்டுக்கு வரும் அரச கடிதங்களை சில நேரம் படித்துப் பரிசீலனை செய்யத் தவறி உதாசீனம் செய்வதாலும் தவறியிருக்கலாம். ஆனால் சாரதி அனுமதிப் பத்திரம் ரத்தாகிய நிலையில் வாகனம் செலுத்திப் பிடிபடுபவர் தமது அனுமதிபத்திரம் ரத்துச் செய்யப்பட்ட விடயம் தமக்குத் தெரியாது என்று கூறுவது எதுவும் அந்த நேரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அத்துடன் பின்வரும் தண்டனைகளிலிருந்து தப்பவும் முடியாது.

- வாகனம் அந்த இடத்தில் பறிமுதல் ஆகி ஏழு நாட்களின் பின்பே திரும்பப் பெறலாம். அதனை எடுத்துச் சென்ற கட்டணம் (Towing charge) வைத்திருந்த கட்டணம் (Storage charge) என்பனவற்றைச் செலுத்தியே வாகனத்தை மீளப் பெறலாம்.
- மதுபோதையில் வாகனம் செலுத்துவது போன்ற ஏதாவது குற்றவியல் தண்டனைக் குள் அகப்பட்டால் 45 நாட்களுக்குப் பின்னரே வாகனத்தினை மீளப் பெறலாம்.
- வாகனமோட்டியவருக்கு ஒரு தண்டனை ரிக்கற் கிடைக்கும்.
- விபத்துக்குள்ளாகினால் காப்புறுதி கொடுப்பனவுகள் எவையும் கிடையாது.
- மீள அனுமதிப்பத்திரத்தினை பெற மேலதிக கட்டணங்கள் செலுத்தவேண்டும். சில நேரங்களில் வீதிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும்.

இவ்வருடம் பூதாகரமாகக் கிளறப்படும் இந்த முறைப்பாடுகளின் எதிரொலி சாரதி அனுமதி பத்திரம் ரத்துச் செய்யப்பட்ட செய்தியினை எடுத்துச் செல்லும், ஒன்ராரியோ மாகாணப் போக்குவரத்து அமைச்சின் கடிதங்கள் பூரணமாக உரியவரின் கைகளிற்கு சேர்க்கப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் அரசின் நடவடிக்கைகளில் மாற்றம் வரும் என எதிர்பார்க்கலாம்.

# ஒருவர் அறியாத நிலையில் ரத்தாகும் அவரின் சாரதி அனுமதி பத்திரம்!

சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999



## கனடிய தகவல் தொடர் 269

### Suspension of Drivers' License without Notification

இவ்வருடம் 'ரொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகையின் புலனாய்வுக் குழு ஊடகவியலாளர்கள் மாகாண அரசை நோக்கிக் கிளறிய முக்கியமான மக்கள் பிரச்சினை இதுவேயாகும்.

பின்வரும் தலைப்புகளில் அவர்களின் புலனாய்வுக் கட்டுரைகள் வெளியாகியிருந்தன. சாரதி அனுமதிப் பத்திரத்தினை ரத்துச் செய்வதனை எப்படி அறிவிக்கின்றார்கள் என்பதனை ஒன்ராரியோ அரசு பரிசீலனை செய்ய வேண்டும். ('Ontario to review how it notifies drivers of licence suspensions') ஏப்ரல் 13, 2017. 'தன்னிச் சையாக தடை செய்யும் சாரதி அனுமதிப் பத்திரங்களினால் குழப்பங்களில் இருக்கும் ஒன்ராரியோ மக்கள்' (Ontario lives in turmoil over arbitrarily suspended drivers's licenses) இப்படியே மாகாணத் தினுள் பாதிக்கப்பட்ட பலரின் கதைகளை பிரசுரித்து மாகாண அரசின் குறைகள் அதிகார சபைக்கு (Ombudsman Ontar io) எடுத்து சென்றனர்.

• திரு. ஜேம்ஸ் ஸ்ராசான் (Mr. James Strachan) என்பவரை வீதியில் பொலிசார் இடைமறித்து பரிசோதனை செய்தபோது சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு, அவ ரது சாரதி அனுமதிப் பத்திரம் ரத்தாகி விட் டது என்பது தெரிய வர இவ்வளவு காலமும் அனுமதிப்பத்திரம் இல்லாமலா வாகனம் செலுத்தியிருந்தேன்? என்பது அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. மூன்று வருடத்திற்கு மேல் ரத்தாகியிருந்தால் இனி ஆரம்ப நிலையிலிருந்து போவது போல எழுத்துப் பரீட்சை, வீதிப் பரீட்சை எனத் தோற்றியே சாரதி அனுமதிப் பத்திரம் பெற வேண்டும். இந்தக் காலத்தினுள் விபத்துகளுக்குள் அகப்பட்டிருந்தால் காப்புறுதியும் கிடைத்திருக்காது. ஏதோ ஒரு சிறு தொகை தண்டனை பணம் செலுத்தவில்லை என்பதுதான் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ரத்தானதற்கான காரணம். ஆனால் அவர் அந்த நேரமே தண்டனைப் பணத்தை செலுத்தி விட்டார் என நிருபித்திருந்தார்.

• ஹமில்டன் நகரில் இருக்கும் திரு. ஜோசப் மொனிக்காம் (Mr. Joseph Monigham) என்பவரின் சாரதி அனுமதிப் பத்திரம் பழைய வாகனத் தரிப்பு தண்டனை பணம் செலுத்தவில்லை என ரத்தாகியிருந்தது காலதாமதமாகத்தான் அவருக்குத் தெரிய வந்தது. ஆனால் அவர் அப்படியொரு தண்டனைப் பணம் தாம் பெறவேயில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

• றிச்மன்ட் ஹில் நகரில் வாழும் Ms. சப்ரினா பெரிரா (Ms. Sabrina Perera) என்பவரின் சாரதி அனுமதி பத்திரம் ஏதோ தண்டனைப் பணம் செலுத்தவில்லை என்ற காரணத்தினால் ரத்தாகியிருந்தது. தண்டனை பணம் செலுத்தாத தவறினை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் அனுமதிப் பத்திரம் பறிமுதலாகிய செய்தி அவருக்குத் தெரியாமல் அவர் வாகனம் செலுத்திக் கொண்டிருந்தார்.

• விற்பி (Whitby) நகரில் வாழும் திரு. நராம்சின் ஹாப்ரியல் (Mr. Naramsin-Gabriel) என்பவரின் அனுமதிப் பத்திரம் ரத்தான விடயம் பொலீசார் வீதிப் பரிசோதனையில் அவரை இடைமறித்து கேட்ட போதே தெரியவந்தது. தண்டனைப் பணம் செலுத்தியிருந்தார். ஆனால் மேலதிகப் பணம் என ஒரு சிறுதொகை செலுத்தாமல் விட்டதுதான் காரணம். ஆனால் அவருக்கு எதுவிதமான கடித அறிவித்தல்களும் கிடைக்கவில்லை.

இனி விடயத்திற்கு வருவோம். பின்வரும் மூன்று வழிமுறைகளில் உங்கள் சாரதி அனுமதிப் பத்திரம் ரத்தாகும் சந்தர்ப்பங்கள் உருவாகலாம்.

1. வீதியில் வைத்துப் பொலிசாரால் சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்பட்டு பறிமுதல் செய்யப்படுதல் (Roadside suspension). மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபடும்போது அல்லது வாகனம் செலுத்தும் தவறுகள் கிரிமினல் சட்டங்களுக்கு உட்பட்டதாக இருந்தால், வீதியில் வைத்தே பொலிசாரால் உடனடியாக குறிப்பிட்ட காலத்திற்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை ரத்தாக்கலாம்.

2. நீதிமன்ற உத்தரவில் சாரதி அனுமதிப் பத்திரம் ரத்து செய்தல். (Court order suspension). நீதிமன்ற விசாரணையின் தீர்ப்பில் தண்டனையாக குறிப்பிட்ட காலத்திற்கு சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்படும்.

3. மாகாண அமைச்சினால் கடிதம் அனுப்பி நிர்வாக ரீதியாக ரத்துச் செய்தல். (Administrative suspension by sending letter by ministry)

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)



## Math Tutorial 344

Answers to tutorial 343

1)Rewrite this as f(n+1) –f(n)=1/3 since the difference between successive terms is constant the terms f(1) ,f(2) ,.......forms an arithmetic sequence with a= f(1) =2 and common difference d==1/3,

$T_n$=a+(n-1)d ,f(100) =2+99(1/3) =35

2)g[f(100)]=g($49^{300}$) =$\log_7$($49^{300}$ )

=300$\log_7$49 =300x2 =600

3)Since the function is a polynomial ,extreme occrs at points whose x coordinates are determined fromdy/dx=0Hence $4x^3+12x^2-16x=0$ x(x+4)x-1) =0 , x=0 ,-4 , 1..Hence the extreme point s are a= (0 ,0), b=(-4 ,-128 ) ,c =(1 ,-30 these are the vertices of a triangle ABC Hence area can be found

4)The parametric equations of the two lines are x=4t ,y=3t and z=2+4t for one line and for the other x=-4-4u ,y= 1+u , z= -2u solving for u and t , t=0 and u = -1 therefore they intersect at ( 0 ,0, 2)

5)The ten numbers that start with 7 are 70,71,72 ...77,78.79, and and those that end in 7 are 17,27,37,77,87,97,. The 77 in both set was counted twice

Tutorial344 Questions

1)Two points Pand Q move along the circumference of a circle at a constant rates.They start at the same point and at the same time .If they move in opposirte direction ,they meet every 6 seconds. If they move in the same direction , they meet every 24 seconds .If the circumference of the circle is 360cmm , find their rates which they move ?

2)When 222 222 222 222 222 is divided by 222 ,the number of digits in the quotient is (A) 5 (B) 13 (C) 14 (D) 12 (E) 11

3)Find the vector equation of the plane that contains the two parallel lines $l_1$ : $\bar{r}$=( 9 ,4 ,-3)+t(3 ,-1 ,1) and

$L_2$: $\bar{r}$=(1 ,4 ,4 ) + t(-6 ,2 ,-2 )

4)What is the distance between the planes2x –y -2z +3 =0 and4x-2y-4z -9=0?

By Mr S.F.Xavier(Teacher) tel 6473409490/4167322228

# சுவாமி விவேகானந்தாவின் வாழ்வும் தத்துவமும் நினைவு தினத்தையொட்டிய கட்டுரை



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

**12.01.1863 – 06.07.1902**

சுவாமி விவேகானந்தா, வீரத்துறவி விவேகானந்தா, இந்துசமய தத்துவஞானி, இந்தியாவின் ஒளி எனவும் பல்வேறு பெயர்களில் உலகம் கொண்டாடிய விவேகானந்தாவின் இயற்பெயர் நரேந்திரநாத் டற்றா (Narendranath Datta) என்பதாகும். நரேன் என்ற பெயரில் அழைக்கப்பட்டவர் இவர். 1863ஆம் ஆண்டு ஜனவரி 12இல் கல்கத்தா (கொல்கத்தா)வில் பிறந்த இவர் ஒரு பெங்காலி (Bengali) ஆவர். இவர் இந்தியாவின் இந்துமத துறவியாகவும், 19ஆம் நூற்றாண்டில் அனைவராலும் போற்றப்பட்ட ராம கிருஷ்ண பரமஹம்சரின் பிரதான சிஷ்யனாகவும் விளங்கியவர். இந்து மதத்தில் உள்ள வேதாந்த மார்க்கத்தையும், யோகாவின் உண்மைத் தன்மை யையும் மேற்கு உலகிற்கு அறிமுகம் செய் தவர். இந்தியாவின் தேசிய உணர்வுக்கு வித்திட்டதுடன் பல்வேறு ராம கிருஷ்ண மிசன்களுக்கு மூலமானவர். இந்திய துணைக்கண்டம் முழுவதும் வலம் வந்ததுடன் வெளி உலகிலும் பல நாடுகளுக்கும் பயணம் செய்தவர். இந்துமத தத்துவத்தை முறையாகப் பரப்பிய இவரது பிறந்த நாள் இந்தியாவில் தேசிய இளையோர் தினம் (National Youth Day) எனக் கொண்டாடப்படுகிறது.

ஒன்பது குடும்ப சகோதரங்களுள் இவரும் ஒருவர். இவரது பெற்றோர்களிடமிருந்தே இவருக்கும் இந்துமத உணர்வு மேலோங்கியது. இளம் வயதிலேயே தியானம் செய்ததுடன் சிவன், ராமன், சீதை, ஹனுமன் என்ற ராமாயண கதாபாத்திரங்களுக்கு முன்பாக இருந்து தியானிப்பார். ஆரம்பத்தில் ஒரு துடிப்புள்ளராகவும் அமைதியற்றவராகவும் காணப்பட்டனர். அடிக்கடி பெற்றோரால் தண்டிகப்பட்டவர. ஒரு தடவை தாயார் 'நான் சிவனை வழிபடுகிறேன். அவர் எனக்கு அவரது பேய்கணங்களில் ஒருவரை தந்துள்ளார்' எனக் கூறினாராம். இவர் 1879 இல் கல்கத்தாவிலுள்ள பிரெசிடென்சி மாநிலக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடங்கினார். தத்துவம், சமயம், வரலாறு, சமூக விஞ்ஞானம், ஓவியம், இலக்கியம் ஆகியனவே இவரின் பாடங்கள். அத்துடன் இந்து மத வேதங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை, இராமாயணம், மகாபாரதம், புராணம், இந்திய கர்நாடக இசை எல்லாவற்றையும் தெரிந்து கொண்டார். இத்துடன் உடற்பயிற்சி, விளையாட்டு, மேலைத்தேய இசை, மேலைத்தேய தர்க்கம், தத்துவம் என்பவற்றையும் கற்று கொண்டார். 1884 இல் BA பட்டம் பெற்றார். மேலைநாட்டினரான இமானுவேல் கான்ட், சார்ள்ஸ் டார்வின், ஜோர்ஜ் W.F. ஹெகல், டேவிட் கியூம் ஆகியோரது நூல்களையும் கற்று தேர்ந்தார். சமஸ்கிருதம், வங்காள இலக்கியம் என்பவற்றையும் கற்றார். William Hastie என்ற அறிஞர் 'நரேந்திரா உண்மையில் ஒரு மேதாவி' (Narendra is realy a genius) என்று பாராட்டினார்.



1880 இல் Keshab Chandra Sen's என்பவரது நவவிதான் என்ற நிறுவனத்தில் இணைந்தார். இவரது குருவாக பிரமோ சமாஜ் இருந்துள்ளார். 1881 - 1884 வரை நம்பிக்கைக் குழு என்ற இயக்கத்தின் மூலம் இணையோர்களது புகைபிடித்தல், மது அருந்துதலை எதிர்த்து போராடினார். இந்த நிலையில் இவர் சிறீராமகிருஷ்ணாவை பற்றி அறிந்து 1881 நவம்பரில் அவரை சந்திக்க டக்ஷினேஸ்வர் காளி கோவிலுக்கு சென்றார். அவர் சென்றதும் முதலில் கேட்ட கேள்வி எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது. ஐயா, 'நீங்கள் கடவுகளைக் கண்டிருக்கிறீர்களா?' என் பதே அக்கேள்வியாகும். எதுவித வெறுப்பு மின்றி சிறீராமகிருஷ்ணா 'ஆம் நான் அவ ரைக் கண்டிக்கிறேன். உன்னைப்பார்ப்பது போலே கண்டிருக்கிறேன், மிகவும் ஆழ மாக பார்த்திருக்கிறேன்' என்று பதில் கொடுத்தார். அதாவது தனது சிஷ்யரிடம் கூட கடவுள் தன்மை உள்ளதென்பதே அவரது பதில். சுயநலமற்ற அன்பினால் நரேந்திரனை வென்றார். இந்த ஒரு பதில் மூலமே ஈடு இணையற்ற குரு சிஷ்யர்களாக இருவரும் திகழ்ந்தார்கள். ஆன்மீக வரலாற்று நாயகர்களாயினர். நரேந்திரா அடிக்கடி தக்சினேஸ்வர் ஆலயத்திற்கு வந்து ஆன்மீக படிப்பை விரைவாக பெற்றார். சிறிராமகிருஷ்ணரிடம் வரும் சிஷ்யர்களுடன் நண்பரானார்.

சிலவருடங்கள் செல்ல இரண்டு சம்பவங்களால்நரேந்திரா மிகவும்நொந்து போனார். 1884 இல் தந்தையார் இறந்துபோன ஒரு சம்பவம். மிகவும் வறுமையான நிலைக்கு சென்று தாயையும் சகோதர சகோதரிகளையும் காப்பாற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். இரண்டாவது விடயம் ராம கிருஷ்ணருக்கு தொண்டையில் புற்றுநோய் ஏற்பட்டமையாகும். 1885 இல் ராமகிருஷ்ணா சியாம்பூர் வீட்டுக்கு சென்று சில மாதங்களின் பின்பு கொசிப்பூரில் உள்ள வாடகை வீட்டுக்கு சென்றார். இங்கு மிகவும் ஆறுதல் வழங்கப்பட்டது. குடும்ப வறுமையாலும், தொழில் பெற முடியாமையாலும் ஒரு ஆன்மீக குழுவுக்கு தலைவரானார். 1886, ஆகஸ்ட் 16இல் ராமகிருஷ்ணர் மறைந்தார்.

ராமகிருஷ்ணரின் முன்னை வழிகாட்டுதல்களின்படி இந்த ஆன்மீக குழுவும் இயங்கியது. ராமகிருஷ்ணரின் மறைவின் பின்பு 15 இளம் சிஷ்யர்களும் இணைந்து பாறாநகர் (Baranagar - வடக்கு கொல்கத்தா) என்ற இடத்தில் ஒரு கட்டிடத்தை கட்டினார்கள். நரேந்திரனின் தலைமையின் கீழ் எல்லோரும் சன்னியாசிகளாயினர். தற்போது தான் நரேந்திரா சுவாமி விவேகானந்தாவாக மாறினார். எனினும் இந்தப் பெயர் பின்னரே நிலைபெற்றது.

இந்த நிலையம் அமைந்த பின்னரே பல சிஷ்யர்கள் இதில் இணைந்து மேலும் ஆன்மீக செயல்களில் ஈடுபட்டனர். இந்தியா முழுவதற்கும், நவீன உலகிற்குமான விழிப்புணர்வும், சக்தியும் இங்கிருந்தே உருவாயிற்று. தானே தனியாக நின்று பல போதனைகளையும், உரைகளையும் நிகழ்த்த தொடங்கினார். 1890 இல் சிறிசாராதேவி அவர்களின் ஆசியைப் பெற்றார். இவரையும் ஒரு புனித அன்னையாக உலகமே அறியும். இவரும் ராமகிருஷ்ணரினை வழிபட்டவர். கொல்கத்தாவில் வாழ்ந்தார். விவேகானந்தாவும் பாறாநகர் மன்றிலிருந்து இந்தியாவை தரிசிக்க நீண்ட பயணம் செய்தார். 1890-1893 வரை இது இடம்பெற்றது.

இந்தியாவின் உண்மையான நிலையை அவரால் கண்டுகொள்ள முடிந்தது. வறுமையும், பின்தங்கிய வாழ்வும் அவரை பெரும் துக்கத்தில் ஆழ்த்தியது. மக்கள் புறக்கணிக்கப்படும் நிலையைக் கண்டார். மில்லியன் கணக்கானோரின் வறுமைக்கு காரணம் என்ன? என்பதனை எண்ணி விவசாயம், கிராம கைத்தொழில்களை ஏற்படுத்த முயன்றார். புதிய முறைகள் பற்றி விளக்கினார். மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தினார். இத்துடன் சமய வேதாந்தங்களையும் விளக்கினார். பொருளாதாரம், ஆன்மீகம் இரண்டையும் இணைத்து சாதாரண வாழ்வுக்கு வழிகாட்டினார். கல்வியையும் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை இவருக்கு ஏற்பட்டது.

மேற்படி திட்டங்களை நிறைவேற்ற ஒரு நிறுவனம் தேவை என்பதனை உணர்ந்தார். பெண் கல்வியை கூட்டியதுடன் ஓர் இயக்க ரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்த முயன்றார். ஒவ்வொரு வறுமையானவரையும், அவர்களது மன அமைப்புக்களையும் மாற்ற முயன்ற இவர் சில வருடங்களில் ராமகிருஷ்ண மிசனை நிறுவினார்.

# WE NEED CONTRACTORS!

Electrical work / Plumbing work / Carpentry work / Garden maintenance & Landscaping / Tree cutting / Painting / Construction - basement, bathroom, kitchen etc.. / Flooring (Hwd, Laminate, Tiles / carpet) / Pest control / Snow removal / Lawn mowing / Duct cleaning / Carpet cleaning / House cleaning / Roof/ Windows / Garbage removal / Garage door repair / HVAC - heating, Cooling & Ventilation / Lock smith services / Alarm & Security camera installation / Basement Water proofing / Blinds / Shutters and any other property maintenance services

## For the following fields to work In the GTA (Toronto, York , Durham and Peel)

Flexible Hours

WATSON PROPERTY MANAGEMENT LTD

Please send in your complete resume/profile **with reference** to **watsonpm1989@gmail.com** or mail us. **416 284 9999**

111 Grangeway Ave. Unit #301 (RBC Building) Toronto, ON M1H 3E9

## ALL COUNTRIES TOUR SERVICES

***AC TOURS -*** Airport, Buffalo, Niagara falls, CN Tower, Central Island, Wonderland, African safari, Midland, 1000 Island, Wasaga, Montreal மற்றும் அனைத்து இடங்களுக்கும் ஒருவர் தொடக்கம் எத்தனை பேர் என்றாலும் அழைத்துச் செல்லப்படும். போட்டோ இலவசம்.

***Contact: Ratha Francis - 416.566.7920 / 416.752.4444***

## COMPUTER REPAIR

**Laptop,Computer Repair, Virus Removal, Data Recovery, Upgrading, Networking, Printer Problems & Any Other Troubleshooting** அனைத்து விதமான **Computer** திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

Please Call Varun: **416.894.6244**

## A+ DRIVING SCHOOL

For all your driving educational needs

***Thava Nagaratnam***

*(Govt. Licensed In - Car Instructor)*

***416.473.6155***

***www.aplusdriving.ca***



## கட்டிடம் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்ணாதிட்டி / கஸ்தூரியார் வீதிச் சந்தியிலுள்ள 7000 சதுர அடிக் கட்டிடம் விற்பனைக்கு உண்டு. முதலீட்டுக்கோ, Hotel ஆக மாற்றுவதற்கோ உகந்தது.

தொடர்புகளுக்கு: **416.717.6351**

## முதியோர் பராமரிப்பு இல்லம்

***VCARE RETIREMENT HOME INC.***

***Personal & Social Care with access to Health Care***

அன்பான அரவணைப்புடன் கூடிய முதியோர் பராமரிப்பினை (Senior Care) 24 மணிநேரம் நாங்கள் வழங்குகின்றோம். Scarborough நகரின் மத்தியில் மிகவும் அமைதியான சூழலில் ஈழத்தமிழர் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் வண்ணம் எங்கள் முதியோர் இல்லம் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு: ***SUBA: 289-200-4677***

***Email: vcarerh@hotmail.com*** ***Website: www.vcarerh.com***

## BUSINESS FOR SALE

Bakery or Restaurant for sale in scarborough

* over 10 years in the Business

* Owner is Retiring *Asking $119,000

Contact: **416.315.9397**

## WANTED

### OFFICE ADMINISTRATIVE ASSISTANT

- Strong oral & written communication skills/professional telephone manners
- Proficient in English & Tamil
- Drafting correspondence, communicating/following up with clients, preparing documents such as quotation reports, undertaking and acknowledgments
- Proven track record with attention to detail
- Proficient with Microsoft Office
- Experience in construction/building restoration, office environment an asset but not necessary
- Previous experience
- Immediate position

Job type: Full Time

Please forward cover letter and resume to:

**BEETA GROUP MANAGEMENT INC.**

Email: contact@beetagroup.com

**Phone: (647)833-3675**

## OFFICE CLEANING CONTRACT

- Available through GTA Area
- Experience Required but will provide Training
- WHIMS Training will be provided
- Some Deposit Required

Also looking for experienced night cleaners

We are looking for cleaners for a restaurant in George Town effective immediately.
7 Days Nightly cleaning.
Only dining area and kitchen floor. No equipments need to be cleaned.

Contact
Phone: 416-727-5410
Email: jobs@focuscleaning.ca

FBM Focus Building Maintenance

# சுவாமி...

20 ஆம் பக்கத்தொடர்ச்சி

இவரை வர்ணித்தனர். நவம்பரில் ஹாவாட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றினார். நியூயோக்கில் வேதாந்த சங்கத்தை நிறுவினார். 1895 இல் நியூயோக்கில் வகுப்புக்களை நடத்தினார். யூன்-ஒகஸ்ட் வரை நியூயோக் ஆயிரம் தீவு பூங்காவில் உரையாற்றினார்.

ஒகஸ்ட் - செப்ரெம்பர் வரை பரிசில் தங்கினார். ஒக்ரோபர், நவம்பரில் லண்டனில் உரையாற்றினார். பின்னர் 1897 இல் இந்தியாவுக்கு திரும்பியபோது மாபெரும் வரவேற்பு இடம் பெற்றது. இந்தியாவில் பல இடங்களில் தொடர்ந்து விரிவுரையாற்றினார். இவரது உரைகளில் சொந்தக் கலாசாரத்திற்கு மதிப்பு செய்தல், இந்து சமயத்தின் ஒருங்கிணைப்பை நிறுவுதல், மக்களுக்கு கல்வியூட்டல் பற்றியே இருந்தது. கொல்கத்தாவில் 1897, மே 01ஆம் திகதி தனித்துவம் வாய்ந்த ராமகிருஷ்ண மிசனை உருவாக்கினார். அங்கிருந்து வைத்தியசாலைகள், பாடசாலைகள், கல்லூரிகள், தங்குமிடங்கள், உள்ளூர் அபிவிருத்தி மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதுடன் புவி அதிர்ச்சி, சூறாவளி என்பவற்றால் பாதிப்புற்ற அனைவருக்கும் உதவ முயன்றார்.

1898 இல் கங்கை நதியின் மேற்குப்புறத்தில் உள்ள வேலூர் என்ற இடத்தில் சந்நியாசிகள் தங்கும் இடத்தினை நிறுவினார். சமய, இன, சாதி அமைப்பு இன்றி இங்கு பலருக்கும் தியானம் வழங்கப்பட்டது. இவருக்கும் மேலைத்தேச சிஷ்யர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டு பலர் இந்த மிசனில் இணைந்தார்கள். மார்க்கிரெட் நோபிள், Mrs. Sevier, Josephine Mcleod, Sara Bernhardt போன்ற பலர் இங்கு இணைந்தனர். சகோதரி நிவேதிதாவும் இங்குள்ள பெண்களுக்கு கல்வி வழங்கினார். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பலர் இந்த மிசனில் இணைந்தனர். இந்த நிலையம் 'Ramakrishna Math' என்று அழைக்கப்பட்டது. இதற்கு முன்பதாக ஜனவரி 15, 1897 இல் கொழும்பு இலங்கைக்கும் 6 - 15 ஆம் திகதிகளில் சென்னையிலும் விரிவுரையாற்றினார். ராமகிருஷ்ண மிசன் ஆரம்பித்த பின்பு காஷ்மீர், வடகிழக்கு இந்தியப் பகுதிக்கும் சென்று திரும்பியுள்ளார். மீண்டும் 1899 யூலை 31இல் இலண்டனுக்கும் ஒகஸ்ட் 28இல் நியூயோக்கிற்கும் டிசம்பர் 3இல் லொஸ்ஏஞ்சலுக்கும் சென்றார். ஒக்ரோபர் 24இல் வியன்னாவில் உரையாற்றி பின்பு இந்தியாவுக்குத் திரும்பி கிழக்கு வங்காளத் அசாம் மாநிலங்களுக்கு சென்று மார்ச் மாதம் ராமகிருஷ்ண மத் நிலையம் திரும்பினார். யூலை 4ஆம் திகதி மகாசமாதி



அடைந்தார்.

இளம் வயதில் அதாவது 39 வயதில் மகாசமாதியடைந்த சுவாமி விவேகானந்தர் போல் ஒரு சுவாமி எவரும் இல்லை. தனது தியான அறைக்குச் சென்றவர் திரும்பவில்லை. இறுதியில் தனது மேற்கத்தைய சிஷ்யர் ஒருவருக்கு ஒரு குறிப்பு எழுதி வைத்திருந்தார். உலகில் உள்ளவர்கள் எல்லோருக்கும் ஒரு கடவுளே உள்ளார் என்பதனை என்னால் உணரமுடிகிறது.I shall inspire men everywhere until the whole world shall know that it is one with God." என்பதே அவரது இறுதி வாசகம்.

சுவாமி விவேகானந்தா இந்தியாவுக்கு கலாசார ஒற்றுமையை வேண்டிநின்றவர். இவரது உரையாலேயே பல தலைவர்கள் அங்கு உருவாகினர். இந்திய தேசிய இயக்கமும் இவராலேயே ஏற்பட்டது. முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு 'இந்திய மக்களுக்கு ஓர் ஊக்கமருந்தாக விளங்கியவர் சுவாமி விவேகானந்தா' எனக் கூறியுள்ளார். நேதாஜி சுபோஸ் சந்திரபோஸ் 'சுவாமிஜி கிழக்கு மேற்கு சமயம், விஞ்ஞானத்தை ஒன்றுபடுத் தியர். இவரது போதனையால் திருந்தாவர் கள் எவரும் இல்லை' எனக் கூறினார் இந்து சமயத்திற்கு அடையாளம் தந்தவர். ஒற்றுமை, பாதுகாப்பு, சவால்கள் எல்லாவற்றையும் ஏற்படுத்தி நிறைவு கண்டவர். மீண்டும் இந்து சமயத்திற்கு புது தத்துவத்தை வழங்கியவர்.

இவரது அற்புதமான வாக்கியங்கள் உலகுள்ளவரை வாழும் தன்மையுள்ளது. 'Education is the manifestation of the perfection already in man.' மனிதனுள் மறைந்துள்ள பரிபூரணத்தை வெளிக்காட்டு வது கல்வி என்ற தத்துவத்தை வெளியிட்டவர். மனிதனுள் ஏற்கனவே மறைந்துள்ள பூரணமே மதம். "Purity, patience, and perseverance are the three essentials to success, and above all, love". என்று கூறிப் பிரிந்தவரே சுவாமி விவேகானந்தராவர்.

# செஞ்சீனா...

25 ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பது குறிப்பிடத்தகுந்தது. ஏறக்குறைய மூன்று மணித்தியாலங்களுக்கு இப்பகுதியைச் சுற்றிப் பார்த்தோம். உண்மையில் இது வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவம். சீனப் பயணம் மேற்கொள்பவர்கள் பார்க்க வேண்டிய இடமிது.

இனி இந்த யங்சி ஆற்றின் உற்பத்தி பற்றிப் பார்ப்போம். இது பல கிளைகளின் சங்கமத்தால் ஆரம்பிகிறது எனச் சீன அரசாங்கம் கூறுகிறது. அதாவது சிங்காய் மற்றும் திபெத்தியப் பீடபூமியிலுள்ள டங்கினா மலைத் தொடரிலிருந்து கிளம்பும் ரோற்றோக் கிளையிலிருந்து ஆரம்பமாகிறது என்கிறது. எனினும் பூகோள அடிப்படையில் இது 16,960 அடி உயரத்திலுள்ள டான்குக் கிளையிலிருந்து ஆரம்பமாகிறது. இக்கிளைகள் இரண்டும் இணைந்து கிழக்குநோக்கி சிங்காய் மாவட்டத்துக்கூடாக ஓடிப் பின் தெற்காக சிச்சுவான் திபெத் எல்லையிலுள்ள ஆழ் பள்ளத்தாக்குக் கூடாக யுனான் மாவட்டத்தை அடைகிறது. இப்பள்ளத்தாக்கில் ஓடும்போது இதன் உயரம் 16,000 அடியிலிருந்து 3,300 அடியால் குறைகிறது. இதன் பிரதான நீரோட்டம் 16,100 அடியாக உள்ளது. சொங்கிங்குக்கும் யிசாங்குக்கும் இடையில் இந்நதி 200 மைல் தூரத்தில் யங்சியின் மலையிடுக்கண்கள் வழியாகச் செல்கிறது. யிபின் என்ற இங்கு இது பல வாவிகளிலிருந்து நீரைப் பெறுகிறது. வூகான் என்ற இடத்தில் ஹன் ஆறு இதனோடு இணைகிறது. இதுவே இதன்பெரிய கிளையாகும். ஜியாங்சி என்ற



இடத்தில் இது சிச்சுவான் படுக்கைக்குள் நுழைகிறது. இங்கே பல கிளைகள் இதனோடு இணைந்து நீர்மட்டத்தை அதிகரிக்கும். பின்பு சொங்கிங்குக்கும் ஹசபெய்க்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் உள்ள வூஷான் மலையை ஊடறுத்து மூன்று மலையிடுக்கண்களுக்கூடாகச் செல்கிறது.

(இதுபற்றி ஏற்கனவே எழுதியுள்ளேன்.)

இடத்தில் மிகப்பெரிய நன்னீர் வாவியான யொயாங் என்ற ஏரி ஆற்றுடன் இணைகிறது. பின்னர் இது அன்ருய் மற்றும் ஜியாங்சு மாகாணங்களுக்கூடாகப் பல வாவிகள் சிறு கிளைகளுடன் சேர்ந்து சங்காய் என்ற நகரில் கிழக்குச் சீனக் கடலில் கலக்கிறது.

தொடரும்...




## நூல் வெளியீடு

"அன்புடைமை" என்னும் சுயமுன்னேற்ற அறிவியல் நூலும், "இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள்" என்னும் இலக்கிய நூலும் வெளியீடு செய்யப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்து நூற்பிரதிகளையும் வாங்கி ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காலம் : யூலை மாதம் 22ஆம் திகதி நேரம்: பிற்பகல் 2:45 மணி
இடம் : ஸ்காபரோ சிவிக் சென்ரர் (Scarborough Civic Centre150, Borough Drive, Scarborough, ON, M1P 4N7)

அன்புடன் அகணி சுரேஸ், நூலாசிரியர் : 416.732.8021

# இது ஒரு அற்புதமான கனடாக் கதை



ஒகஸ்ட் மாதம் 11ந்திகதி 1986ம் ஆண்டு. இரண்டு படகுகளில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட 155 தமிழ் மக்கள் நியூபவுண்லாந்துக் கடலில் மிதந்து கொண்டிருந்தனர். அதிஷ்டவசமாக அந்த நேரத்தில் அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த St. Mary's Bay பகுதி மீனவர்கள் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 155 தமிழர்களையும் கண்டுவிட்டனர். அதிர்ந்துபோன மீனவர்கள் அன்று தாம் பிடித்த மீன்களையெல்லாம் கடலில் தூக்கி எறிந்துவிட்டு, பசியாலும், குளிராலும் மயங்கிய நிலையிலிருந்த அகதிகளைத் தாமதமின்றித் தமது மீன்பிடிக் கப்பலில் ஏற்றிக் கொண்டனர். 155 தமிழ் உயிர்களும் காப்பாற்றப்பட்டன. கனடா குடிவரவுக் காவல்படை கையேற்கும்வரை அத்தனை தமிழர்களையும் அம் மீனவர்களே பொறுப்புடன் தமது மீன்பிடிக் கப்பலான Allantic Reaperஇல் பாதுகாத்து வைத்திருந்தனர்.

பாதுகாப்பு நாடித் தப்பிவரும் அகதிகள்மீது கனடா காட்டிவரும் தாராள மனப்பான்மையையும் இரக்கத்தையும் இந்த வீரச் செயல் விளக்குகிறது.

கனடியத் தமிழர் பேரவையானது கனடாவின் 150வது பிறந்த தினத்தை முன்னிட்டு, இந்தச் சம்பவத்தின்போது அகதிகளை ஏற்றி வந்த படகுகளில் ஒன்றை TAMIL JOURNEYS`86 to 2017 என்றழைத்துக் காட்சிப்படுத்துவதில் பெருமை கொள்கிறது. கனடா-150 கொண்டாட்டங்களில் இந்த 86ம் ஆண்டுத் தமிழ்ப்பயணப் படகு நாட்டின் பல்வேறு பகுதிகளில் காட்சிக்கு வைக்கப்படுகிறது.









TAMIL
JOURNEYS`86 to 2017

**மொன்றியல்: ஜூன் 24, 25**
இடம்: அருள்மிகு திருமுருகன் கோயில்

**கிங்ஸ்ரன்: ஜூன் 27, 28**
இடம்: *Springer Market Square*

**ஒட்டாவா: ஜூலை 1, 2 2017**
இடம்: *O'Connor & Lisgar Street*

## கனடாவின் 150 வது பிறந்த தினத்தை தமிழ்க் கனடியர்களாக ஒட்டாவா சென்று கொண்டாடுகிறோம்.

நம் கலை, கலாச்சாரம், உணவு ஆகியவற்றை சக கனடியர்களுடன் 2017 ஜூலை 1ந் திகதி பகிந்து கொள்வோம்.

CANADA 150
Canada
ONTARIO 150

This project has been made possible in part by the Government of Canada and Province of Ontario.

Ce projet a été rendu possible en partie grâce au gouvernement du Canada et Province d'ontario

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
*"Voice of Tamil Canadians"*

மேலதிக விபரங்களுக்கு: கனடித் தமிழர் பேரவை @ 416 240 0078 www.canadiantamilcongress.ca

# திருக்கோயில் இருதயம்



நா. க. சிவராமலிங்கம்

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளை கடவுள் என்பர். அவர் எல்லாப் பொருளையும் கடந்து நிற்பதுடன் எல்லாப்பொருளிலும் கலந்தும் நிற்பவர். இதனால் அவரை இறை என்றும் கூறுவர். அவர் எல்லாப் பொருளிலும் தங்கி நின்று அவற்றை இயக்குபவராயின் அவரை இயவுள் என்றும் கூறுவர்.

இங்ஙனமாய இறை, கடவுள், இயவுள் என்னும் பெயர்கள் இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் எங்கும் என்றும் எழுந்தருளி இருப்பதைக் குறிப்பனவாகும். பொருள் தன்மையால் வேறாயும் கலப்புத் தன்மையால் ஒன்றாயும் உயிர்க்கு உயிராம் தன்மையால் உடனாயும் உள்ள இறைவனை உயிர்கள் காண்பதற்கு ஒரேஒரு வழி வழிபாடாகும். வழிபாட்டிற்கு வாய்ப்பான இடம் திருக்கோயில்களாகும். வழிபாடாவது இறைவனை அருவம், அருவுருவம், உருவம் என்னும் வடிவங்களில் கண்டு மனம், மொழி, மெய் என்பவற்றால் வணங்குதலாகும். அருவ வழிபாடு யோகம், தியானம் முதலியன கைவரப்பெற்ற யோகியர்க்கே இயலும். ஆனால் சாதாரண மக்கள் அருவுருத் திருமேனியாகிய சிவலிங்கம், உருவத் திருமேனியாகிய நடராசர், சோமஸ்கந்தர், தட்சணாமூர்த்தி, பிச்சாடனன் முதலிய திருவுருவங்களை வணங்க முடியும். வாழ்வை அளிப்பது வழிபாடேயாகும். அதன் பெருமையை அளவிட முடியாது. இந்த சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வழிபட்டு முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாகும்.

"வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை சூழ்ந்த மாமலர் தூவித் துதியாதே வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் வழிபாட்டின் தேவையைப் பாடியுள்ளார். "வணங்கத் தலை வைத்து, வார்கழல் வாய் வாழ்த்த வைத்து, இணங்க தன் சீரடியார் கூட்டமும் வைத்த எம்பெருமான் அணங்கொடு அணி தில்லை அம்பலத்தே ஆடுகின்ற குணங்கூரப்பாடி நாம் பூவல்லி கொய்யாமோ" என்று மணிவாசகசுவாமிகள் அருளியுள்ளார். வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் உரிய இடம் திருக்கோயிலேயாகும். அங்கே சென்று கண்டு இறைவனை வழிபடுதலே உண்மையான வழிபாடாகும். எனவேதான் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும், "கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் நீதி நூல்கள் கூறியுள்ளன. "கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத்தலை" என்று திருவள்ளுவர் கூறியிருப்பதும், "ஆலயந்தானும் அரனைத் தொழுமே" என்று மெய்கண்டத் தேவர் அருளியதும் இதனையேயாம். இறைவனை இறைஞ்சினால் இன்னருள் கிட்டும் என்பது திருமூலர் வாக்கு.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை<br>
ஒப்பிலி அப்பனை ஊழி முதல்வனை<br>
எப்பளி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்<br>
அப்பரிசீசன் அருள் பெறவாமே!

உள்ளத்தில் உள்ளானடி அது நீ<br>
உணர வேண்டுமடி<br>
உள்ளத்தில் காண்பாயெனில் கோயில்<br>
உள்ளேயும் காண்பாயடி<br>
என்றாலர் கவிமணி.



திருநெறி என்றும், பெருநெறி என்றும் சைவ நெறி என்றும் போற்றப்படும் சிவநெறிக்கு திருக்கோயில்கள் ஆணிவேர் போன்றவை. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட இறைவன் ஆன்மாக்கள் பொருட்டு திருக்கோயில்களில் எழுந்தருளியிருந்து அருள் சுரக்கின்றான். திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னை சிவனெனவே கண்டவர்க்கு சிவனுறைவன் அங்கே என்பது அருணந்த சிவாச்சாரியார் திருவாக்காகும். திருக்கோயில் வழிபாடு சரியையாளர், கிரியையாளர், யோகியர், ஞானியர் முதலிய எல்லோர்க்கும் வேண்டியதாகும். "புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு, நீருண்டு அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும். எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை நன்னறியாமல் நழுவுகின்றாரே" என்பது திருமூலர் திருவாக்கு. யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை என்றும் அவர் அருளியுள்ளார்.

மக்கள் எல்லோரும் திருக்கோயில் வழிபாடு செய்தல் வேண்டும் என்று நமது சமயாச்சாரியர் பெருமக்களான நால்வர் பெருமக்கள் நமக்கு வழிபட்டுக் காட்டியுள்ளார்கள். அத்துடன் திருக்கோயில்களில் திருத்தொண்டும் புரிந்துள்ளார்கள். திருஞானசம்பந்த சுவாமிகள் சீர்காழியில் சிவஞானம் பெற்றதும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவதிகையில் திருவருள் பெற்றதும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவெண்ணை நல்லூரில் ஆட்கொள்ளப் பெற்றதும், மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறையில் சிவஞானம் பெற்றதும் எல்லோரும் அறிந்ததேயாகும். இவர்கள் திருநல்லூர் பெருமணம், திருப்புகலூர் திருவஞ்சைக்களம், சிதம்பரம் ஆகிய திருக்கோயில்களில் பேரின்பநிலை பெற்றதும் எல்லோரும் அறிந்ததேயாகும். பல்லாயிரக்கணக்கிலான பக்தர்களின் பாதம்படும் திருத்தலங்கள் உண்மையில் புண்ணிய பூமியேயாகும்.

இறைவன் திருவருளை பெறுதற்கு சிறப்பிடமாக விளங்குபது ஆலயங்களேயாகும். தனிப்பட்டவரின் நன்மைக்கும், சமுதாய நன்மைக்கும், நாட்டு நன்மைக்கும், உலக நன்மைக்கும் ஆலயங்களின் நலம் இன்றியமையாததாகும். எனவே நித்திய, நைமித்திய பூசைகள் குறைவின்றி செம்மையாக நடைபெற வழி செய்ய வேண்டும். எம்முடம்பிற்கு இருதயம் எப்படியோ அதுபோல ஊருக்கு ஆலயம் அமைந்துள்ளது. வானளாவிய கோபுரங்களுடன் வனப்புற விளங்கும் ஆலயங்கள் அண்டத்தில் விண்டிட முடியாத நன்மைகளை விளைவிப்பனவாகும்.

# அழவிட்டுப் போனதெங்கே

எம். ஜெயராமசர்மா



அப்துல் ரகுமானே அழகுதமிழ் பாவலரே<br>
செப்பமுடன் கவிதைதந்த சிந்தனையின் கோமானே<br>
முப்பொழுதும் தமிழ்பற்றி மூச்சாக நின்றவரே<br>
எப்பொழுது உன்தமிழை இனிக்கேட்போம் இவ்வுலகில்!

தமிழ்க்கவிதைப் பரப்பினிலே தனியாக ஆட்சிசெய்தாய்<br>
உரத்தகுரல் கொண்டுநீ உயர்கருத்தை ஈந்தளித்தாய்<br>
கவிதை அரங்குகளை களியாட்டம் ஆக்காமல்<br>
புதுமை தனைப்புகுத்தி புத்தூக்கம் கொடுத்துநின்றாய்<br>
அப்துல் ரகுமானை அனைவருமே பார்க்கவைத்தாய்<br>
அருமருந்தாய் கவிதைகளை அனைவருக்கும் கொடுத்துநின்றாய்<br>
இப்போது உன்கவிதை கேட்பதற்குத் துடிக்கின்றோம்<br>
எங்குசென்றாய் ரகுமானே என்றுதேடி அழுகின்றோம்!

பேராசிரியராய் பெரும் பதவி வகித்தாலும்<br>
ஆராத காதலுடன் அருந்தமிழை அணைத்தாயே<br>
ஊராரின் மனமெல்லாம் உட்கார்ந்த ரகுமானே<br>
உன்பிரிவால் அழுகின்றோம் ஒருகவிதை சொல்லுவாயா!

ஆராய்ச்சி யாளனே அருந்தமிழ் வல்லோனே<br>
ஆசிரியாய் இருந்து அருநூல்கள் தந்தவனே<br>
ஆட்சியாளர் அருகிருந்து அருங்கருந்து உரைத்தவனே<br>
அப்துல் ரகுமானே அழவிட்டுப் போனதெங்கே!

# எங்கள் தந்தை



நல் ஆசானாய் இருந்து ஆலமரம் போல் நிழல் தந்து<br>
நாம் ஆசைப்பட்டதை அடைய உதவியவர்<br>
எங்கள் தந்தை..!<br>
இல்லற வாழக்கையில் எமக்கு ஈடில்லா அறிவையூட்டி<br>
இல்லறத்தை நல்லறமாய் கொண்டு வாழ்ந்தவர்<br>
எங்கள் தந்தை..!<br>
தூரதேசம் சென்று தனித்திருந்து பாடுபட்டு உழைத்து எமது<br>
துன்பம் துடைக்க தூண்போல் நின்று தாங்கியவர்<br>
எங்கள் தந்தை..!<br>
பள்ளியில் சேர்த்து பலரும் எம்மை பாராட்டும் வகையில்<br>
படி படி என்று படிக்க வைத்துப் பட்டம்பெற வைத்தவர்<br>
எங்கள் தந்தை..!<br>
நோயுற்ற போதெல்லாம் மனம் நொந்து நொந்து எமது<br>
நோய் தீர மருத்துவர் கொண்டு வைத்தியம் பார்க்க உதவியவர்<br>
எங்கள் தந்தை..!<br>
எம்மேல் பாரபட்சம் காட்டாத பந்தபாசம் கொண்டவர்<br>
என்றும் பக்தி மானாய் பண்புடன் வாழ்ந்தவர்<br>
எங்கள் தந்தை..!<br>
உற்றார் உறவினர் கற்றார் கல்லாதார் யாராயினும்<br>
உள்ளம் கனிய வரவேற்று உபசரித்து வாழ்ந்த பண்பாளர்<br>
எங்கள் தந்தை..!<br>
பருவ வயது வந்ததும் பருவம் தவற விடாது எமக்கு<br>
பண்பான துணை தேடி வாழ்க்கை அமைத்து தந்தவர்<br>
எங்கள் தந்தை..!<br>
எம்மை வாழவைத்த தெய்வம் எம் தந்தையென<br>
என்றென்றும் வணங்குவோம்<br>
அவர் காட்டிய வழியில் நடப்போம்.



கவிநாதம் பரந்தாமன்

# பிரியா ரட்ணகுமாரின் வீணை அரங்கப் பிரவேசம்

**கலாரசிகன்**

கடந்த 10.06.2017 சனிக்கிழமை மாலை ஆர்மேனியன் இளையோர் அரங்கில் மிக விமரிசையாக இடம்பெற்றது திரு. திருமதி. ஜெயந்தி இரத்தினகுமார் தம்பதியினரின் அருமைப் புதல்வி செல்வி பிரியா இரட்ண குமாரின் வீணை அரங்கேற்றம். இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக உலகப்புகழ வீணை மகாவித்துவான் இராஜேஸ் வைத்தியா அவர்கள் கலந்துகொண்டார் என்றால் வீணை அரங்கேற்றம் எவ்விதம் களைகட்டியிருக்கும் என்பதனைச் சொல்லத்தான் தெரியவேண்டியதில்லை.

“தாரமும் குருவும் தலைவிதிப்படியே” என்பார்கள். அன்னையை ஆசிரியையாகக் கொண்டவர் அரங்கேற்றம் கண்ட நாயகி. அது மட்டுமன்றி தங்கள் குடும்ப நண்பரான உலகறிந்த வீணை வித்துவான் இராஜேஸ் வைத்தியா அவர்களின் கடைக் கண்பார்வையல்ல நேரடிப் பார்வையின் கீழ் பயின்று கொண்டு வீணையில் புடம் போடப்பட்டுள்ளார் என்பதனை வீணை அரங்கேற்றத்தைப்பார்த்த எவருமே எழிதில் புரிந்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

பிஞ்சுக் கரங்களால் அவர் வீணையை மீட்டியமையை சபையிலுள்ளோர் வைத்த கண்வாங்காமல் பார்த்திருந்தனர் என்றால் அது ஒரு கைவரப்பட்ட கலைஞரால்தான் இயலும். அதனை இந்தப் பாலகி நிகழ்த்திக் காட்டினார் என்றால் அவரது லாவகமாக வீணையைக் கையாண்ட விதமேயாகும். எந்த ஒரு தயக்கமும் இன்றி மிகவும் நிதானமாகவும் பல களங்கண்ட அனுபவஸ்த்தர் போலவும் அவரது விரல் தளிர்கள் வீணையின் நரம்போடு விளையாடின.





மிருதங்கம் மிகப் பிரபலமான இருவரால் வாசிக்கப்பட்டது. மிகவும் தரம்வாய்ந்த இசைக்கலைஞர்களான காரைக்குறிச்சி மோகனராமன், கனடாக் கலைஞர் பரஞ்சோதி ரதிருபன் மற்றும் கடத்தில் இப்படியும் ஓர் ஒலியா என்று அதிசயப்பட வைத்த வித்தகர் ரவி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் இசைப்பிரவாகம் அரங்கத்தை அதிரவைத்தது. ராகம் தானம் பல்லவி ஒரு சக்கை போடு போட்டதற்கு இந்த அணியிசைக் கலைஞர்களின் மேதாவித்தனத்தை எவ்விதம் கூறுவது.

பிரதம விருந்தினர் அவர்கள் உரையாற்றும் போது பிரியாவின் திறமையில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. இன்று காலையில்தான் மிருதங்கம் மற்றும் கடம் வித்துவான்கள் வந்திருந்தனர். ஆனால் ஒத்திகை பார்க்காமலே அரங்கேற்றத்தைச் செய்யப் பிரியாவால் முடியும் என்பதனை நான் அறிவேன். அவள் தானாகவே பாடல்களை இசையமைத்து வாசிக்கும் பக்குவம் பெற்றிருந்தாள். நான் 2005 ஆம் ஆண்டில் இருந்து நன்கு அறிவேன். பிரியாவின் ஆர்வம், தன்னம்பிக்கை அவரை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது என்றதோடு நான் அவருக்கென்று ஒரு மெட்டைப் போட்டுக் கொடுத்திருந்தேன். அதனை சற்று வேகமாகத்தான் வாசிக்க வேண்டும். என்னால் முடியுமா என்று கேட்டவள் நான் எதிர்பார்த்ததற்கு மேலாக மிக வேகமாக வாசித்து அணியிசைக் கலைஞர்களைத் தன்பின்னே இழுத்துச் சென்றார் என்றால் அவரது திறமை எப்படிப் பட்டது என்பதனை நீங்கள் மிருதங்க வித்துவானிடமே கேளுங்கள் என அவரிடம் ஒலிவாங்கியைக் கையளித்தார். எனக்கு மிக வியப்பாக இருக்கின்றது. நாங்கள் ஒத்திகை பார்க்காமல் இவ்விதம் வாசித்துள்ளாரே என்று பிரியாவின் திறமைப் பாராட்டினார். இவ்விதமே கடம் வாசித்த விற்பன்னர் மற்றும் எங்கள் கலைஞர் பரஞ்சோதி ரதிருபன் அவர்களும் எடுத்துரைத்தமை வீணை அரங்கேற்றத்தின் அற்புதத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

இந்த நிகழ்வைத் தொகுத்து வழங்கியவர் இசை ஆசிரியையும் பாடகியுமான சாயிப்பிரியா அருந்தவசண்முகநாதன். இவர் மிகச் சிறப்பாக தொகுப்புரையை செய்திருந்தார். பிரதம விருந்தினரின் உரையின் பின்னர் கனடா தொல்காப்பிய மன்றத்தின் தலைவர் திரு. த.சிவபாலு அவர்களின் பாராட்டுரையும் வாழ்த்துக் கவிதையும் இடம்பெற்றமையைத் தொடர்ந்து இசைக்கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். பிரதம விருந்தினருக்குத் தங்க மாலையை அணிவிக்கப் படாதபாடுபட்டார்கள் திரு. திருமதி. ஜெயந்தி ரட்ணகுமார் தம்பதியினர். பிரதம விருந்திரோடான குடும்பப் பிணைப்பு சிக்கெடுக்க முடியாத இறுக்கமானது என்பதனை அது கட்டியம் கூறியதோ என்று எண்ண வைத்தது.

மொத்தத்தில் மிக ரம்மியமான ஒரு மாலை வேளையாக இந்த இசை நிழ்வு இடம் பெற்றது என்றால் பிரியாவின் எதிர்காலம் ஒளிமயமாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

# காற்று...

27 ஆம் பக்கத்தொடர்ச்சி

அதாவது abuse பண்ணுகிறவர், victim ஐ நல்லவர் என்றும் தன்னை விட்டு victim போக முடியாது என்றும் வார்த்தை மூலம் உணர வைப்பார். லீலாவும் மருத்துவர் என்றதாலோ, இறந்துவிட்ட அண்ணனின் சிநேகிதன் என்றதாலோ, முதல் முறை நோயாளி ஆக சந்தித்ததாலோ தெரிய வில்லை, இந்த உணர்ச்சியில் சிக்கிக்



கொண்டார் என நன்றாகத் தெரிகிறது. எனவே ஒவ்வொரு தடவையும் VC அரை மனதுடன் 'sorry' சொன்னவுடன், லீலாவும் எல்லாவற்றையும் மறந்து அவருடன் திரும்பச் சென்று மறுபடியும் அவரால் அவமதிக்கப்படுகிறார்.

படத்தின் கடைசியில் VC உண்மையில் திருந்திவிட்டார் எனக் காட்டியிருந்தால் பார்வையாளர்கள் நிம்மதியாக இருந்திருப் பார்கள். ஆனால் VC மறுபடியும் 'sorry' என்றுதான் கூறுகிறார். இவ்வளவு நேரமும் VCயை நம்பாத பார்வையாளர்கள் ஏன் இப்பொழுது நம்ப வேண்டும்? லீலா மறுபடியும் சிக்கி விட்டார் என அஞ்ச வேண்டியுள்ளது.

அதற்கு மேல் இயக்குனரும் VCயை குளிர் கால coat, தொப்பியுடனும், லீலாவை மட்டும் கோடைகால உடுப்பில் நிறைந்த பனியில் காட்டியதும் ஏற்றுக்கொள்ள முடி



யாமல் இருக்கிறது. படத்தில் நிறைமாதக் கர்ப்பிணிக்கு திருமணம் நடப்பது போல தேவையில்லாத காட்சிகள் புகுத்தப்பட்டு இருக்கின்றன. VC மட்டுமல்ல, இயக்குனரும் பெண்களை மதிப்பதில்லை போல் படத்தைப் பார்க்கும் போது தோன்றுகிறது.






**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# 18 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட படைப்பாளிகள் இன்றும் பேசப்படுகின்றனர்!

- வீரகேசரி மூர்த்தி -

"18ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட படைப்பாளிகள் பற்றி இன்றும் பேசப்படுவதற்கான காரணங்கள் என்ன?" எனும் தலைப்பில் தமிழ் எழுத்தாளர் இணையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இலக்கியக் கலந்துரையாடல் மல்வேர்ன் குடும்ப வள நிலையத்தில், இம்மாதம் மூன்றாம் திகதி எழுத்தாளர் இணையத் தலைவர் கலாநிதி பாலசுந்தரம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

"உணர்ச்சியை தூண்டும் வகையில் அமைவதே இலக்கியங்கள். அவை காலத்துக் கேற்ப மாற்றிக்கொள்ளக் கூடியவையாகும். அந்த வகையில் பண்டைய இலக்கியமான தொல்காப்பியம் இன்றும் ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்கின்றது. அதில் தமிழ் மக்களின் வாழ்வியல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில் முதலிடம் வகித்துவந்த செவ்விலக்கியங்கள் இன்று காலங் கடந்தவை ஆகிவிட்டன. அமெரிக்க அறிஞரான திரு.மார்க் ருவைன் எல்லே என்பவர் அதனை படித்துள்ளார். செவ்விலக்கியத்தைப் படிக்கும்போதே அவை எமக்குள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வல்லமை கொண்டவையாகும். பின்னர் அடிமனதில் ஆழப் பதிந்திருந்து எம்மைக் காக்கவும் வல்லது. அதனால் அதனை முதன் முறையாகக் கற்கும்போது ஆச்சரியமாக இருக்கும். அதனைக் கற்றவர்களின் நிலை இன்று மாறி விட்டாலும் அவர்களது செவியில் அது ஒலித்துக் கொண்டே இருக்கும்." என உரையாற்றிய பேராசிரியர் பசுபதி அவர்கள் கூறினார். அவர் மேலும் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இலக்கண நூல்களில் தமிழ் மக்களின் வாழ்வியல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. 1946ம் ஆண்டில் கலைமகள் ஆசிரியர் திரு.கி.வா.ஜெகந்நாதன் அவர்கள் "பயப் படாதீர்கள்" என்ற தலைப்பில் தொல் காப்பியம் பற்றி கட்டுரை எழுதியிருந்தார். நமது தமிழ் மொழியில் பழம் பாடல்களைக் கொண்ட நூல்கள் இன்றும் தொடர்ந்து நிலைத்து நிற்கின்றன. அவை வேற்று நாட்டு நாகரிகங்களினால் அழிக்க முடியாது போய்விட்டன. "பட்டினப் பாலை" நூலில் காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. உருத்திரங்குன்றனர் தான் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். பாடல்களுக்கு மெட்டு அமைக்கப்பட்டவை பரிபாடல்களாகும். இலக்கண நூல்களில் உள்ள சில சூத்திரங்கள் இன்றும் புரியாத முடிச்சுக்களாகவே இருக்கின்றன. சங்க காலத்தில் எழுதப்பட்ட திருக்குறள் இன்றும் வாழும் இலக்கியமாகத் திகழ்கின்றது. அத்துடன் அது என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியதாகும். அதனால்தான் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த வான் புகழ் கொண்ட தமிழ் நாடென பாரதி பாடினார். தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி என ஐம்பெரும் காப்பியங்கள் உண்டு. இவற்றுள் சிலப்பதிகாரம் இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது. அது இன்றும் நிலைத்திருக்கின்றது. ஆனால் அதற்குப்பின் தோன்றிய பல இலக்கியங்கள் அழிந்து போய் விட்டன. மக்கள் மத்தியில் உணர்ச்சியைத் தூண்டக் கூடிய நூல்களே சிறப்பினைப் பெற்று நீண்ட காலம் நிலைத்து நிற்கின்றன. புற்றீசல்கள் போன்று தற்போது தோன்றும் நூல்கள் விரைவாக அழிந்து போய் விடுகின்றன.

ஆனால் வற்றாத நதியினைப் போன்று என்றென்றும் நிலைத்திருந்து நமது தாகத்தை தீர்த்து வருவது கம்பராமாயணம் ஆகும். கம்பனின் தமிழ் நடை ஒப்பற்ற நடையாகும். அதனால் காலத்தை விஞ்சியவர் கம்பர். இலக்கிய நூல்களுக் கான சிறந்த உரைகளும் இலக்கியங்கள் நிலைத்திருப்பதற்கு ஒரு காரணமாகும். ஆனால் நிலைத்திருக்கும் இலக்கியங்கள் யாவும் சிறந்த இலக்கியமாகி விடாது. செவ்விலக்கியம் வாழ்வியல், மொழி பற்றிக் கூறுவதால் நிலைத்திருக்கின்றது".

அதனை அடுத்து "நவீன படைப்பாளிகளின் படைப்புக்கள் காலங்கடந்து நிலைக்குமா?" என்ற தலைப்பில் டாக்டர் போல் ஜோசெப்பின் புதல்வியான வைத்திய கலாநிதி மேரிகியூரி போல் உரையாற்றிய போது பின்வருமாறு கூறினார்: "பாரதியின் காலமே நவீன இலக்கியத்தின் ஆரம்ப காலமாகும். கவிதைகளுக்கு எளிய நடை அவசியமெனக் கருதி முதன் முதலாக எளிய நடையில் பாடல்களை எழுதியவர் பாராதி. அதனால் அவரது காலமே இலக்கியத்தின் நவீன ஆரம்ப காலமாகும். அதனையடுத்து கல்கியின் நாவல்கள் எளிமையானவை. சிலப்பதிகாரம் போன்று இலக்கியங்கள் திரைப்படங்களாவதும் உண்டு. புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்து இலக்கியங்கள் திரைப்படங்கள் ஆக்கப்பட்டுள்ளன. தனது பதினான்கு வயதிலேயே புரிந்து கொள்ளக் கூடிய வகையில் கவிதைகளை எழுதியவர் கவிஞர் வைரமுத்து ஆவார். "பொன்னியின் செல்வன்" அன்று முதல் இன்று வரை நிலைத்து நிற்கின்றது. இலக்கியங்களில் பன்முகத் தன்மை இருக்க வேண்டும். அதாவது வரலாறு, மானிடவியல், இலக்கியம் எல்லாம் கலந்திருக்க வேண்டும். தொல் காப்பியத்தில் அவை உண்டு.



தத்துவங்களை திரும்பத்திரும்ப படிக்கும் போது புதுப்புது கருத்துக்களும், பரிணாம வளர்ச்சியும் புரியும். மனித உணர்வினை பதிவு செய்யும் இலக்கியங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும். திரு.ஜெயமோகன் எழுதிய "சோற்றுக் கணக்கு" என்ற நாவல் வாசகர்களை வியப்படையச் செய்கின்றது. வரலாற்றினை ஆவணப்படுத்தும் முதல் நாவலாக "பொன்னியின் செல்வன்" திகழ்கின்றது. உலகு தழுவிய இலக்கியங்கள் நிலைத்து நிற்கக் கூடியவை.

எழுத்தாளர் இணைய செயலாளர் திரு. சிவா சின்னையா இறுதியில் நன்றியுரை ஆற்றிய போது இளம் தலை முறையினருக்கு இலக்கிய ஆர்வத்தினை தூண்டுவதற்கு நாம் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். இளம் சந்ததியினருக்கு ஊக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் படைப்புக்களை உருவாக்க வேண்டும். அடுத்தாண்டு எழுத்தாளர் இணையத்தின் இருபத்தைந்தாவது ஆண்டாகும். அதனை நாம் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்" என்றார்.

## சேர். ஜோன் ஏ மைக்டொனால்ட் கனடாவின் முதல் பிரதமர்

முருகேசு மயில்வாகனன்

மாசறு தலைவனின் மதிசார்ந்த ஆட்சியிலே
வேசதாரிகள் வெந்தழிவர் வேறு.

சேர்ஜோன் ஏ மைக்டொனால்ட் செப்பமிட்ட ஆட்சியிலே
சார்ந்திருந்த மக்களின் சாதனைகள் - பாரெங்கும்
ஓங்கிடவே பல்லோரும் ஊடுருவி இங்குவர
பாங்கான நாடிதுவே பார்.



தாய்நாடு ஸ்கொட்லன்ட் தாவி வந்தே
தங்கினார் கனடா நாட்டில்
காய்வின்றி மக்களோடு கலந்து பேசிக்
களிப்போடு பணிசெய் துவந்தார்
ஆய்வாள னாகவே அங்கு மிங்கும்
ஆய்ந்தறிந்தே சேவை செய்தார்
தாய்போல மக்களைத் தாங்கி நின்றார்
தப்பில்லா ஆட்சி யதனால்.

அங்கிங்கு வாழ்ந்தவரை அழைத் தொன்றாய்
அனைவரையும் ஒன்று சேர்த்தே
பங்கமின்றி ஆட்சிசெய்த பண்பாந் தலைவன்
பயணித்தார் நீண்ட தூரம்
மங்காத ஆட்சியிலே மக்கள் நயந்தார்
மனிதநேயம் ஓங்கி ஒளிர
சிங்கமென எழுந்துநின்றார் சீரான ஆட்சியால்
சிறந்த தலைவராய்ச் சீருற்றார்.

நல்லாட்சி நாடுகளில் நாம்வாழ் கனடா
நன்றென்றே உலகிலே நாம நிந்தோம்
செல்வச் செழிப்புடனே செப்பமாம் சீரமைப்பு
சேர்ந்த மக்களின் செயற்பாடும் சேர்ந்திடவே
வல்லாட்சி வழிவகுக்கும் வலிமை சேர்க்கும்
வாழ்முறையும் ஒழுங்கமைப்பும் வாய்த்த தாலே
ஒல்லும் வகையில் ஓர்ந்து வளர்ந்தே
ஒற்றுமையாய்ப் பணியாற்றும் ஒழுங்கு மாமே.

CANADA 150

மாகாண ஒன்றிணைப்பின் மாபெருந் தலைவன்
மக்கள் விருப்போடு மாற்றார் மதிக்க
ஏகாந்த மாகவே எடுத்த பணிக்கு
எல்லோரின் ஒத்துழைப்பும் என்றும் அவர்க்கு
மாகாணம் நான்கின் மாண்பார் தலைவர்கள்
மதிப்புடன் சேர்ந்துபேசி கூட்டாட்சி யாக
ஆகாவென ஐயமின்றி ஒப்ப மிட்ட
ஆனந்தத் திருநாள் இந்நா ளாமே.

# உலகத்தமிழர் பூப்பந்தாட்ட சம்மேளனம் நடாத்தும்

## 5 ஆவது பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

**July 29/30 -2017**



WTBT CANADA 2017

**Contact:**
+1 416-900-6501
info@canada.wtbf.net
www.wtbf.net
Jeyakanth: 416-219-9824
Vaheesan: 416-890-3680
Chandrika: 647-282-1459

**Men Singles**
(U13, U15, U17, U19, O40, O50 and Open)
**Men Doubles**
(U13, U15, U17, O40, O50, O60 and Open)
**Women Singles**
(U13, U15, U19, O30 and Open)
**Women Doubles**
(U13, U17, O30 and Open)
**Mixed Doubles**
(O40 and Open)

**Venue:**
Epic Sports Badminton
39 Bertrand Ave,
Scarborough, ON , Canada.

கனடாவிலுள்ள அனைத்து கழகங்களும் பங்குபற்றுவதோடு சுவிஸ். பிரான்ஸ். இங்கிலாந்து. நெதர்லாந்து. ஜேர்மனி. சுவீடன். டென்மார்க் . நோர்வே. அவுஸ்திரேலியா. இலங்கை. இந்தியா என பல நாடுகளிலிருந்தும் தமிழ் வீரர்கள் பங்குபற்றும் பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி.

இதுவரை போட்டிக்காக பெயர்களை பதிவு செய்யாதவர்கள் தயவு செய்து மேலேயுள்ள அலுவலகர்களை தொடர்பு கொள்ளவும்.

பாரிய அளவிலான சுற்றுப்போட்டியாதலால். உலகத் தமிழர் பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் உபகுழுவில் இணைந்து பங்காற்ற விரும்பும் கழக உறுப்பினர்களும். தொண்டர்களாக உதவி செய்ய விரும்புபவர்களும் தயவு செய்து மேல்காணும் அலுவலகர்களைத் தொடர்பு கொள்ளவும்.

**Connecting Tamils around the World**

நகைச்சுவைத் தொடர் 354

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



வட்ஸ்அப் வரதரைச்சுற்றி ஒரு படை. இது மட்டுமல்லாமல் ஓம் உலகண்ணை வீட்டிலை தான் நிக்கிறன் என்று வரதர் கதைத்துக் கொண்டிருக்கும்போது அவரது லப்ரொப்பினுள் எல்லோரும் தலையை நுழைத்து பார்த்துக்கொண்டிருந்தனர்



என்ன உந்த உடுப்பு... 13 கோடி கோடியோ? தமிழகத்தில் சரவணா ஸ்ரோர் உரிமையாளரின் மகளின் திருமண உடுப்பு உலகையே பார்க்க வைத்துள்ளது!
கதிரையிலை இருந்தெழும்ப தங்கம் தேயாதோ என்றா செக்கண்ட்புளோர் செல்லம்மா. என்ரை 600 டொலர் சங்கிலியையே நான் லொக்கரில் வைச்சிருக்கிறன்.

வரதர் தொலைபேசி அழைப்பை முடித்துவிட்டு தனது சம்பளம் இல்லாத கடமையை தொடங்கினார்.

தனது இறந்த அம்மம்மாவின் 31ஆம் நாள் நினைவு தினத்தில் தான் அழுதழுது பேசுவதை படமெடுத்து வட்ஸ் அப்பில் போடவேணுமாம். அதுவும் அழுவதை குளோஸ் அப்பில் எடுக்கவேணுமாம்.
வரதர் அவரிடம் கேட்டாராம் உங்கடை அம்மம்மாவின் லாஸ்ற் ஜேர்ணி (last journey) என்ற அல்பம் பாத்தனான் அதிலை நீங்கள் அழேல்லையே?

அதற்கு அவர் சொன்னாராம் தன்ரை போனிலை வீடியோ இல்லையாம். நோர்வேயிலை இருக்கிற தம்பிக்கு எல்லாம் ரெலிபோனிலை சொல்லிக் கொண்டிருந்தவராம். வட்ஸ் அப்புக்காகவே வசனம் பேசிப் பழகினம்.



இந்தியப்பிரதமர் மோடி மாட்டிறைச்சிக்கு தடை போடுகிறார். ஆனால் கொழும்பில எங்கோ நாயின் மண்டையோடுகள் கண்டு பிடிச்சவையாம்.

சிலவேளை கடைகளில் நாய் இறைச்சி பரிமாறப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கிறார்களாம் என்று சொன்னதும்
ஆட்டிலறி அன்னம்மா விழுந்தடித்துக்கொண்டு வெளியே ஓடினா. காறித்துப்பும் சத்தம் கேட்டது.. ஐபொட் அகிலாண்டேஸ்வரி சற்று அருவருப்புடன் சொன்னா நானும் அன்னம்மாவும் கொழும்புக்கு தீபாவளிக்குப் போன நாங்கள் எல்லா இடமும் சாப்பாடு விலை. ஆனா..ஒரு கடையிலை மட்டும் மலிவு என வாங்கி சாப்பிட்ட நாங்கள். அதுதான்..அதைத்தான் கலந்தாங்களோ?....என புலம்பினா ஆட்டிலறி அன்னம்மா.



நாய்தின்னா காசென்பினம் கடைசியிலை நீங்கள் போய் நாய்சாப்பிட்டிட்டு வந்திருக்கிறியள் என்று சொன்னா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

நாயின்ரை மண்டையோடு எலும்புக்கூட்டுக்கு விசாரணை நடத்தச் சொல்லீனம். மன்னாரிலும் யுத்தகாலத்தில் இராணுவ முகாம்களுக்கருகில் பல மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிச்சவை. அதுக்கு நோ இன்குயறி? அதுக்கு விசாரணை இல்லை...என சசிகலாவின் லோயர் பேசியதுபோல பேசி முடித்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.

யூ நோ வட் என்ன தெரிமோ....எனத்தொடங்கினா ஐபொட் அகிலாண்டேஸ்வரி. இப்ப ஸ்ரீலங்காவிலை இறக்கிறவையின்ரை தொகை கூடுதாம். அதுகும் கனபோர்...உணவுக் கட்டுப்பாடில்லாமல் சுகாதாரமற்ற சாப்பாடு சாப்பிடுகினம். எல்லாம் ரேக்அவுட். சுகர், கொலஸ்ரறோல், பிறசர். இளவயதிலேயே இறக்கின்றனர்.



போர்க் காலத்தில் உணவின்றி இறந்தவர் பலர். இன்று போரில்லை. மிதமிஞ்சிய போரால் இறந்தவர் பலர்.

ஆசிய நாடுகளில் தேர்தல் முறைகளில் ஊழல் பித்தலாட்டம் என சொல்பவர்கள் மற்றைய ஜனநாயக நாடுகள் அமெரிக்கா ஐரோப்பா நாடுகளைப் பாருங்கள் என்கிறோம். ஆனால் மதிக்கமுடியாத வார்த்தைப் பிரயோகம், பொய் வாக்குறுதிகள்.



றொனால்ட் ட்றம்ப் எவ்.பி.ஐ. அதிகாரியை வேலை நீக்கம் செய்ததும் நீர்தான் சொன்னீர் என ஒருவரும்....நான் சொல்லவில்லையென ஜனாதிபதி ட்றம்ப் அவர்களும் ஏட்டிக்கு போட்டி பேசுவது தினம் தினம் பார்க்கும் விறுவிறுப்பான சீரியலை விட மக்களால் பார்க்கப்படுகிறது.



ஞாபகம் இருக்கிறதா யூன் 15..30

15. உலக காற்று தினம்



20. மகாகவி உருத்திரமூர்த்தி நினைவு தினம் - (1927-1971)
சிறுநண்டு மணல்மீது படமொன்று போடும் சிலவேளை அலைவந்து அதைக்கொண்டு போகும் - மகாகவி

20. உலக அகதிகள் நாள்



18. தந்தையரை வாழ்த்தும் நாள் (fathers day)

21. அப்பிள் கணினி நிறுவனம் தனது முதலாவது BOOK இனை வெளியிட்டது



21. கோடை காலம் ஆரம்பம்

22. உலக இசை தினம்



23. யாழ். கோட்டையை போத்துக்கேயரிடமிருந்து டச்சுக்காரர் கைப்பற்றினர்.

24. கவியரசு கண்ணதாசன் பிறந்ததினம் (1921..1981)



24. மெல்லிசை மன்னன் எம்.எஸ். விஸ்வநாதன் பிறந்ததினம்

26. 1976ல் உலகின் மிக உயர்ந்த சி.என் ரவர் (கோபுரம்) மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது. (சி.என். ரவர் உச்சியிலே சில்லறைக் கடையும் கலகலப்பு. - கலகலப்பு திரைப்பட பாடல் 2003)

27. ஈழத்து எழுத்தாளர், மல்லிகை இதழின் ஆசிரியர் டொமினிக் ஜீவா பிறந்தநாள் 1927

27. இ.முருகையன் ஈழத்துக் கவிஞர்.(1935..2009) "கங்கையாளே கங்கையாளே காடு தழுவி வரும் கங்கையாளே" ஈழத்துப்பாடல் இவருடையது.



30. நிலா குகதாசன் நினைவுதினம். (இளையநிலா குகதாசன்) இன்னொரு நாளில் உயிர்ப்பேன்

யூலை 1 கனடா 150 ஆவது ஆண்டு விழா

## இணுவில் திருவூர் ஒன்றியம் (கனடா)

17 ஆவது ஆண்டாகத்தொடர்ந்து நடத்தப்படும் தமிழ்மொழித் திறமைகாண் மற்றும் பண்ணிசைப் போட்டிகள்- 2017

கனடாவாழ் இணுவில் பிள்ளைகள் மத்தியில் தமிழ் அறிவையும் சைவசமய அறிவையும் வளர்க்கு முகமாக ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

காலம் - 15.07.2017 சனிக்கிழமை இடம் - Young Nak Korean Presbyterian Church
நேரம் - காலை 9:00 மணி 650 McNicoll Ave, Scarborough. M2H-2E1

மேற்படி போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் இணுவில் பிள்ளைகள் (17 வயதுக்குட்பட்ட) எம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செ. தளையசிங்கம் 416-496-9071 மு. கிருபாகரன் 416-430-0422
சோ. சிவநாயகம் 647-885-7407

## மார்க்கம் தமிழ் முதியோர் சங்கம்

26.05.2017 மார்க்கம் ஆமடேல் மண்டபத்தில் நடைபெற்ற **"மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தின்"** 15வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2017,2018 க்கான நிருவாகக்குழுவின் புகைப்படம்.



**நிற்பவர்கள் இடமிருந்து வலம்: திருவாளர்கள்:** இ.சந்திரசிறி, சி.பொன்னம்பலம், வி.கணேசலிங்கம், ப.பத்மநாதன்,
**திருமதிகள்:** நாகேஸ்வரி கைலாயபிள்ளை, மகேஸ்வரி அரசரத்தினம்,ஜெயலக்ஸ்சுமி இராசரத்தினம், ருக்மணி பாலசுப்பிரமணயம். (நிர்வாகக்குழு உறுப்பினர்கள்)

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்:** திரு. சி. மகேந்திரநாதன் - கணக்காய்வாளர்
திரு. சண்முகன் - உப தலைவர் திருமதி.லீலா சிவானந்தன் - பொருளாளர்
திரு. இ.சுந்தரலிங்கம் - தலைவர் திரு. ந.சிவசுப்பிரமணியம் - கௌரவ செயலாளர்
திரு. கு.பரமநாதன் - இணைப்பாளர் திரு. அ.பற்குணன் - உப செயலாளர்
**சமுகமளிக்கமுடியாதோர்:** திரு.இ.நாகராஜா - நிருவாக்கக்குழு உறுப்பினர்



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
$5 Free Lycachat credit when you download
Lycachat
ஒருவருட
இணைப்புச் சந்தா
$99
மட்டுமே
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
$99
மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
பன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள்
INDIA CANADA USA
INCLUDED
TENTKOTTA
EROSNOW
சிவலிங்கா
கடம்பன்
காஷ்மோரா
மாநகரம்
BAJIRAO MASTANI
SANAM TERI KASAM
DISHOOM
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
iPhone & iPad
Tablet & Mobile
Download on the App Store
GET IT ON Google Play
உங்கள் MOBILE DEVICE இல்
TENTKOTTA மற்றும் EROSNOW Apps ஐ
download செய்து திரைப்படங்களை
பார்த்து மகிழுங்கள்
Google play
Download on the App Store
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
SALES
647 968 1087
CUSTOMER SERVICE
647 931 1745
www.lycatv.tv
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCA MEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCA MEDIA LTD. THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

Ajax

CREMATORIUM & VISITATION CENTRE INC.

Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax

## New Crematorium / Visitation Centre



**Serving our Community at:**

**384 Finley Avenue Ajax, ON L1S 2E3**

**Tel: 289-372-3300 / *info@acvc.info***

**பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது**

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.




FOR ALL YOUR MORTGAGE NEEDS
Access over 30 lenders with one application
Best Rates & Advice You Can Trust!
Purchase
PRE-QUALIFIED
Refinance
PRE-APPROVED
Renewal
Dedicated and knowledgable team...
Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...
Our commitment to you is to provide with the very best...
Pradeepraj Mani
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com
Gaya Kathir
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca
MORTGAGE ALLIANCE

KOENIG
PROPERTY MANAGMENT LTD
We take the stress out of managing your investment property.
416.895.5000 • 1.800.909.7209

வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
If you get sick or disabled while you are working you will get continuous income.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2

TOP 100 REALTORS IN CANADA (#68 of 21,000)
"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
Buy/Sell
RE/MAX
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
All-Stars Realty Inc., Brokerage
Independently Owned and Operated
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
NO DOWN PAYMENT? கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate. You're in good hands.
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at...
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
(University of Toronto)
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East on Warden)

வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க..
பொன்னம்பலம் மகாலிங்கம்
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive #205 Markham ON. L3S 4N8 Tel: 905.201.9977
*Independently owned and operated

Free Real Estate Class - Call: 416.321.6969

FREE Real Estate Classes Starts Every week
• Office open 7 days • 9:00 am - 9:00 pm
• Over 5,000 Sqft. office • Conveniently Located in GTA Square Mall
An experienced Manager to provide classes with the most advanced and up-to-date education and training.
To Join Free Real Estate Classes Please Call :
416.321.6969
HomeLife/GTA Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

Homes by Natheesh
BUY/ SELL/ RENT/ INVEST with Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
• FREE Home Evaluation
• FREE Home Staging
• FREE Virtual Tour
HomeLife/GTA Realty Inc., Brokerage
For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
647.545.8462
SALES REPRESENTATIVE

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com
www.newcondoproject.ca/com
RE/MAX DYNASTY REALTY INC.
RE/MAX Dynasty Realty Inc. Brokerage*
Tel: 905.471.0002 8 Shadlock St. #7, Markham ON L3S 3K9
Independently owned & operated

BUYING OR SELLING
வீடு வாங்க விற்க...
Indra Michael Xavier
Sales Representative
Direct: 647-995-6829
Indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr. Unit 205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned & Operated